மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

லர் 8] விரோதிகிருது — பங்குனி மீ [இதழ் 5

6-வது மூலிகை! [விலை 50-

உ

முருகா.

மூலிகை மணி இதழ்

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும்

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

துணை ஆசிரியர் : க. வெங்கடேசன், B. Sc.,

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50—காசு.

பங்குனி இதழில்

1.	வேல் வேல் இளையவேலே!	1
2.	கார்ட்டூன்	2
3.	மாற்றியே தீர வேண்டும்! (தலையங்கம்)	3
4.	நோயும்—மருந்தும்	12
5.	மூலிகை மன்னர் வரலாறு	17
6.	சித்தர் இலகு மருத்துவம்	20
7.	மூலிகை அகராதி	23
8.	நம் நாட்டு மூலிகைகள்	25
9.	ஆசிரியர் அறிக்கை	32
10.	அறவுரை!	33
11.	நம் நாட்டுச் சித்தர்கள்!	34
12.	புற்று நோய்!	39
13.	உன்னைத்தான் குமுதமே!	44
14.	ஐந்தறைப்பெட்டி துணுக்குகள்	49
15.	தலை முதல் கால் வரை	50
16.	உடல் நலக் குறிப்புகள்	53
17.	மேக நோய்	54
18.	அனுபவம் உணர்த்தும் உண்மை!	62
19.	செய்தி!	63
20.	இதய ஒலி!	64

தொலைபேசி எண் : 726, 1236. த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

மூலிகை மணியில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் மூலிகை மணி பதிப்பகத்திற்கே உரிமை உடையது. கட்டுரைகள், கவிதைகள் அனைத்திற்கும் எழுதிய ஆசிரியர்களே பொறுப்பு.

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY - TANJORE
1 - APR 1972

அன்புள்ள தமிழ் நெஞ்சங்களே!

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக 'இந்திய மருத்துவம்' என்பதை 'சித்த மருத்துவம்' என்று மாற்றவேண்டும் என்பது குறித்து அரசுக்கு தலையங்கம் எழுதி எழுதி கையும் மரத்து விட்டது. இந்நிலையில், போராடியாவது

பெயரை மாற்றியே தீருவது

என்று முடிவெடுத்து, இறுதியாக தமிழக ஆளுநர் அவர்கட்கு 'பகிரங்க மடல்' ஒன்றைத் தலையங்கமாக எழுதியுள்ளோம்.

தமிழ் மண்ணில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த நமது 'சித்த மருத்துவம்' அந்தப் பெயரில் அழைக்கக் கூட உரிமை இல்லை என்றால் "நாம் தமிழர்கள்; தமிழினம் என்று கூறிக் கொள்வதில் பயனில்லை.

எனவே, இம்மாத தலையங்கத்தினை ஆழ்ந்து படித்து, ஆதரித்து, உங்களின் கருத்துரையை

மேதகு. தமிழக ஆளுநர் அவர்கள்,
ராஜ் பவன், கிண்டி, சென்னை.

என்ற முகவரி இட்டு உடனடியாக எழுதி அனுப்புங்கள்.

எத்துனையோ காரணங்கட்காக எவ்வளவோ பணத்தை வீணே செலவு செய்கிறோம். நமது மொழிக்காகவும், சித்த மருத்துவம்' தன்னிலை பெற்று உரிமையுடன் வாழ, இருபதே காசு செலவழித்து, இம்மாத தலையங்கத்தை ஆதரித்து ஆளுநர் அவர்கட்கு கடிதம் எழுதுங்கள்.

உங்களின் கடிதம் ஒவ்வொன்றும், உங்களின் தமிழ் உணர்வை எதிரொலிக்க வேண்டும்!

பொங்கி எழுங்கள்!

தமிழ் உணர்வுடன் எழுதுங்கள்!!

வெற்றி நமதே!!!

மூலிகை மணி வாசக அன்பர்கள் கவனத்திற்கு!



15—11—70 முதல் நமது மூலிகை மணி மருத்துவ மனை 15-படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. இதில் வெளியூர்களில் இருந்து வருவோர் வெளியே எங்கும் தங்கவேண்டிய அவசியம் இல்லை. வேலூர் வந்ததும் தொலைபேசி எண் : 726 அல்லது 1236 எண்களில் ஏதாவது ஒன்றினைக் கேட்டு வந்த விபரத்தை தெரிவித்து விட்டால் தங்க வசதியும் கொடுத்து, தக்க ஏற்பாடு களும் செய்துதரப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். தீராத நாள்பட்ட நோயாளிகள் தக்க துணையுடனும், சமையல் செய்ய ஒரு சில பாத்திரங்களுடனும் வருவது மிக்க நல்லது.

நெ. 4, சாதுகாரமடம் 2வது தெரு, வேலூர்-1 (வ ஆ)

சென்னையில் எமது அலுவலகம் :

நெ. 23, கிளப் ரோடு—கிழக்கு ஷெனாய் நகர், சென்னை-30

பிரதி வெள்ளி, சனிக்கிழமைகளில் நோயாளிகள் இங்குவந்து மூலிகை மன்னர், ஆ இரா. கண்ணப்பர் அவர்களை சந்தித்து நோய் பற்றிய ஆலோசனையும் மருந்தும் பெறலாம். ஆலோசனைக் கட்டணம் உண்டு.

— மேலாளர் : மூலிகை மணி.

உ

ஆண்டவனுடன் ஆண்டொன்றுக்கு 2-நாள்!

மூலிகை மணி ஆசிரியர்

ஆ. இரா. கண்ணப்பர் அவர்களின்

திருத்தணிகை

சித்ரா பௌர்ணமி

12-வது ஆண்டு விழா!

★

நாளது பரிதாபி ஆண்டு சித்திரை மாதம் 15, 16-ஆகிய தேதிகளில், (27, 28—4—72) வியாழன், வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும். வழக்கம் போல் மூலிகை மணி சந்தா, வாசக அன்பர்களும், தமிழ் மருந்துகளைப் பயன்படுத்தி நோய்களைப் பூரண குணப்படுத்திக் கொண்ட அன்பர்களும் தணிகை வேலனை சேவிக்க வேண்டாமா?

எனவே, நமது ஆசிரியர் அவர்கள் மூலிகை மருத்துவம் செழிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு இடைவிடாமல் ஆண்டு தோறும் நமக்காக; நம் தமிழ் மருத்துவத்திற்காக

தணிகை ஆண்டவனை

வேண்டிக் கொண்டு, அவனது அடியாளாய் இருந்து 2-நாள் சேவை செய்யும் காட்சியை நாமும் கண்டு களித்து, இம்மை-மறுமையில் நலம்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பாக புதியதாக சேர்ந்த சந்தா அன்பர்கள் யாவரும் வந்து கலந்து **திருத்தணிகை முருகன் திருவருளுக்குப்** பாத்திரராகும் வாய்ப்பினைப் பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

29—3—72
வேலூர்.

மேலாளர் : மூலிகை மணி

முன்னறிவிப்பும் விபரங்களும்

தங்கும் இடம் :—திருத்தணிகை தேவஸ்தான ஆபீஸ் பக்கத்து
வேலூர் வணிக வைசியர் சத்திரம்

தேதி :— 27—4—72, 28—4—72 இரு நாட்கள்

வாசக, சந்தா அன்பர்கள் வந்து தங்கியிருந்து சுவாமிக்கு செய்யும் திருமுழுக்கு, மலைமீது மாலை நடக்கும் சொற்பொழிவு, இரவு நடைபெறும் திருவீதி உலா உற்சவம் ஆகிய நிகழ்ச்சி களில் கலந்துக்கொண்டு, இரண்டு நாட்களும் ஷ சத்திரத்தில் ஆசிரியர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ள சிற்றுண்டி, உணவு ஆகியவைகளை 'தணிகைவேலனின் பிரசாதம்' என நினைத்து வெளியே செல்லாமல் உண்டு, ஒற்றுமையாக அருட்காட்சியினை கண்டு களிக்க வேண்டுகிறோம்.

27—4—72 வியாழன் மாலை மலைமீது வசந்த மண்டபத்தில்

தமிழ்ப்பண் ஆராய்ச்சி வித்தகர்,
குடந்தை திருவாளர்,

ப. சுந்தரேசன் அவர்கள்

திருமுருகாற்றுப்படை பற்றியும்

28—4—72 வெள்ளி அன்று மாலை

ஆசிரியரின் குருநாதர், அருள்மொழியரசு

திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

திருக்காளத்திக் கண்ணப்ப நாயனர்

என்னும் சொற்பொழிவும் நிகழ்த்த அன்புடன் இசைவு
தந்துள்ளார் என்பது பற்றி மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்பர்கள் அனைவரும் வருக! வருக!!

உ

வேல் வேல் இளையவேலே!

அடியார்களுக்கு தஞ்சம்
அளிக்கும் வீரவேல்
ஆருயிருக்கு அருள்
கொடுக்கும் வெற்றிவேல்
இருள் மலமாயை
நீக்கும் சக்திவேல்
ஈசனுக்கு குருமொழி
கூறிய ஞானவேல்
உலகம் உய்ய காக்க
வரும் கந்தவேல்
ஊக்கமுடையார் உள்ளத்தே
உருகும் முருகவேல்
எளியோன் மனமதில்
உறையும் அருள்வேல்
ஏற்ற மாமையல்
போக்கும் வடிவுவேல்
ஐயனுக்கு இளையான்
தாங்கும் தணிகைவேல்
ஒழுக்கமுடையார் நெஞ்சில
தோன்றும் செங்கதிர்வேல்
ஓங்கார பொருள்
வடிவமான மந்திரவேல்
ஒளவைக்குக் கனி கொடுத்து
நின்ற பழனிவேல்
ஃகர நிலை நின்று
அருளும் இளையவேலே!

— அ. கி. கோவிந்தர்ராசன், ஆம்பூர்.

கார்ட்டூன்!

'மூலிகை மணி' நடத்த இருக்கும் உரிமைப் போராட்டம்.



ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.— (தாயுமானவர்)

மலர் 8] விரோதிகிருது - பங்குனி மார்ச்—72 [இதழ் 5

மாற்றியே தீரவேண்டும்!

[தமிழக அரசினரின் ஆதரவில் சென்னையில் இயங்கிவரும் 'இந்திய மருத்துவ இயக்குனர் அலுவலகம்' என்பதை 'சித்த மருத்துவ இயக்குனர் அலுவலகம்' என்று மாற்ற வேண்டும் என்று வேண்டி, மாண்புமிகு. தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்களுக்கு மூலிகை மணி வாசகர்கள் சார்பில் பகிரங்கமாக வெளியிடப்படும் மடல்.]

அன்பும் பண்பும் வாய்ந்த தமிழக ஆளுநர் அவர்களே!

வணக்கம். வாழி!!

பல நூறு ஆண்டுகட்கு முன்னர் வடநாட்டிலிருந்து தமிழ் படிக்க 'அகத்தியர்' என்னும் முனிவர் பொதியமலை வந்தார். அவருக்குத் தமிழ் கற்றுத் தந்தவர் சுப்பிரமணியர்.

அகத்தியருக்குப் பிறகு பல அந்நியர்கள் தமிழ் கற்க தமிழகம் வந்தாலும், அரசியல் பின்னணியுடன் நீங்கள் வடக்கிலிருந்து தமிழின் அருமையையும்—பெருமையையும் அறிந்து; தமிழ் கற்க தமிழகம் வந்துள்ளீர்கள். உங்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் சிறந்த பணியை ஏற்றிருப்பவரும் டாக்டர் சி. பாலசுப்பிரமணியர் தான்!

அகத்தியர் சிவபெருமானின் செல்வாக்குடன்
தமிழ் கற்க தமிழகம் வந்தார்!
தாங்கள் அரசியல் செல்வாக்குடன்
தமிழ் கற்க தமிழகம் வந்துள்ளீர்கள்!!

அகத்தியருக்குத் தமிழ் கற்பித்தவர் சுப்பிரமணியர்
தங்கட்குத் தமிழ் கற்பித்து வருபவர் பாலசுப்பிரமணியர்.

அகத்தியருடன் ஒப்பிடக்கூடிய வகையில் தமிழின் பால் பற்றும் பாசமும் கொண்டுள்ள உங்களைப் பாராட்டுகின்றோம். கூடவே ஒரு கடமையையும் நினைவூட்டுகின்றோம். அது எங்கள் உடைமையைப் பற்றியது.

அகத்தியர் தமிழைக் கற்று 'அகத்தியம்' என்ற பேரிலக்கண நூலினையே படைத்து தமிழ் மொழிக்கு நன்றிக் கடன் ஆற்றினார். நீங்களும் தமிழ் கற்கின்றீர்கள்! நிச்சயமாக அகத்தியரைப் போல் தமிழுக்கு நன்றிக் கடன் ஆற்ற வேண்டாமா?

இதோ!

நீங்கள் பயின்று வரும் தமிழுக்கு ஆக்கம் தரும் வகையில் ஒரு நல்ல பணியினைத் தாங்கள் ஆற்றவேண்டும் என்று எமது வாசகர்கள் இந்தப் பகிரங்க மடல் மூலம் ஆற்றுப் படுத்துகின்றனர். அந்த நல்ல பணியினை செய்ய வேண்டிய அவசியம், அவசரம், ஆகியவற்றினை கீழ்க்கண்டவாறு விளக்குகின்றோம்.

- *அன்பு கூர்ந்து படியுங்கள்.*
- *அனுதாபத்துடன் ஆழ்ந்து சிந்தியுங்கள்.*
- *ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்*
- *அதுவே, தமிழுக்குத் தாங்கள் செய்யும் நன்றிக் கடனாகும்.*

கடந்த 2 ஆண்டுகளாகத் தமிழ் படிக்கும் தங்கட்குத் தமிழின், தமிழ்க்கலைகளின் பெருமையை நான் சொல்லித் தெரிவதைக் காட்டிலும் உங்கள் தமிழ் ஆசான் பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிகமாகவும்—ஆழமாகவும் சொல்லியிருப்பார்கள். தமிழில் தோன்றி வாழ்ந்து வளர்ந்த கலைகள் 64 ஆகும். இந்த 64 கலைகளில் தமிழோடு ஒன்றி ஓங்கியது தமிழ் மருத்துவம் என்று போற்றப்படும் சித்த மருத்துவம். இந்த மருத்துவத்தினைப் பற்றிய சிந்தனை தான் இந்த மடல் முழுதும் இருக்கப் போகிறது. இந்த மடலினைத் தாங்கள் படிக்கும் போது டாக்டர் சி. பா. அவர்கள் பக்கத்திலிருந்தால், அவரிடம் "சித்த மருத்துவம்" என்றால் என்ன? என்று கேளுங்கள். "அழகு தமிழில் அந்த மருத்துவம் பற்றிய செய்திகளை அவர் அழகாகக் கூறுவார்" அதனைக் கேட்ட பின்னர், இன்னும் சற்று ஆழமாகக் கூர்ந்து படியுங்கள். ஏனெனில் இம் மடல் இறுதியில் ஒரு வேண்டுகோளினை

தங்கள் முன் வைக்கப் போகின்றேன். அதனை எந்த அடிப்படை உணர்வில் நான் எழுதுகின்றேனோ, அந்த உணர்வை உங்கள் மனதில் நான் உண்டாக்க வேண்டும். அந்த உணர்வு-தமிழ் உணர்வு.

தமிழகத்தில் கடந்த நானூறு ஆண்டுகளாக ஒரு கலைப் புரட்சி உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருக்கிறது. அந்த 'கலைப்புரட்சி' வெடித்து சிதறும் நாள் 'மூலிகை மணி வாசகர்களால்' நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த பகிரங்க மடலை விடுக்கின்றது மூலிகை மணி.

பழமைச் சிறப்புகளுடன் பல்வேறு உண்மைகளை உள்ளடக்கி வாழ்ந்து வளர்ந்து வந்த தமிழர்களின் தனிப்பெரும் மருத்துவமான 'சித்த மருத்துவம்' கடந்த 400 ஆண்டுகளாக ஆரியர், இசுலாமியர் ஆங்கிலேயரின் சேர்க்கை வாசனையால் முறையான சட்டபூர்வமான ஆதரவினை இழந்து விட்டது. இந்த மருத்துவம் மக்களிடையேயும், அரசினரிடையேயும் எங்ஙனம் செல்வாக்கு இழந்தது என்பதை அறிஞர் T V சாம்பசிவம் பிள்ளை அவர்கள் கூறுகின்றார் :

"The Siddha system which was in vogue in Southern India long before the Aryan period, had fallen into disuse; and consequently a major portion of the Siddha works was either destroyed or lost for want of sufficient encouragement. Later generations could not take it up in right earnest without State aid, as at the time of East India Company, almost all the Indian Chemical Works and factories in various places were ordered to be closed down on the ground that the preparations were crude and dangerous, but really with a view to encourage and promote Western Medicine. Subsequently, the passing of the Poisons Act gave the final death-blow especially to the Siddha system dealing entirely with medicines prepared with metals and metalic poisons and this gave rise to the practice of Ayurveda in S. India. It is still more regrettable to note that no research work was taken up in this direction even during the time of the Asiatic researches or even subsequently".

இங்ஙனம் அரசினரின் ஆதரவு இழந்த நிலையில், மருந்துகள் செய்வதற்கு இன்றியமையாத தேவைகளான பாடாணங்களுக்கு சட்டத்தடைகள் வந்த காரணத்தால், புகழ்பெற்ற சித்த மருத்துவர் கள் திக்குத் தெரியாது பரிதவித்தனர். இந்த சமயம் பார்த்து ஆங்கி

லேயரின் ஆதரவு பெற்ற ஆயூர்வேத மருத்துவர்கள், அரசியல் செல்வாக்கினால் "ஆயூர்வேதம் தான் இந்திய மருத்துவம்" என்ற தவறான ஒரு எண்ணத்தை ஆங்கில ஆட்சியாளர்களிடையே புகுத்தி விட்டனர். அப்போது சற்று விழிப்பு நிலையில் இருந்த யூனானி மருத்துவர்கள் இதனை மறுத்துப்போராடி யூனானியும் இந்திய மருத்துவம் தான் என்று அவர்கள் மனதில் இடம் பிடித்தனர். சித்த மருத்துவர்கள் அப்போது "சித்த மருத்துவம் என்பது தனி மருத்துவம்" என்று எவ்வளவு சொல்லிய போதும், அப்போதிருந்த வலிமையான ஆயூர்வேதக்காரர்கள் 'ஆயூர்வேதத்தின் ஒரு பகுதியே சித்த மருத்துவம்' என்று பொய்யான ஆதாரங்களைக் கூறி அரசினரின் கவனத்தை ஆயூர்வேதம் நோக்கியே திருப்பிக்கொண்டனர்.

கடந்த நூற்றாண்டில் ஆயூர்வேதக் காரர்கள் செய்த சதியால், தலை சிறந்த சித்த மருத்துவக் குடும்பங்கள் அழிந்தன. இயல்பான வளர்ச்சி குன்றியது. இது விடுதலைக்கு முன்பிருந்த நிலை.

விடுதலைக்குப் பின், ஆயூர்வேதம் முழுவளர்ச்சி பெற்ற ஒரு மருத்துவமாகியது. யூனானி முழு வளர்ச்சி பெற வில்லையானாலும், போதிய வளர்ச்சிப் பெற்றது. ஆனால், வடவர்களின் ஆதிக்க மனப்பான்மையில் மாற்றம் ஏற்படவில்லை. "சித்த மருத்துவம் — தனித் தமிழ் மருத்துவம். ஆயூர் வேதத்தினின்று மாறுபட்டது" என்ற கொள்கையை மத்திய அரசிடம் சொல்ல ஆயூர் வேதக்காரர்கள் மறுத்தனர் ; மறைத்தனர்.

பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் பணம் முழுதும் வடநாடெங்கும் ஆயூர்வேத மருத்துவ மனைகளும், கல்லூரிகளுமாக ஆயூர்வேதத்திற்கே செலவிடப்பட்டது. இவ் வகையில், தமிழகத்தில் 'ஆயூர்வேதம்' போதிய வளர்ச்சிபெற இயலவில்லை. காரணம் ஆயூர்வேதம் படிப்பது தமிழில் அல்ல! தமிழிலேயே படிக்க விரும்பிய சித்த மருத்துவர்கள் சென்னையில் இருந்த சித்த மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் பயின்றனர். அங்கு, ஆங்கிலத்திலும் — தமிழிலும் சித்த மருத்துவப் படிப்பு கற்றுத் தரப்பட்டது. அதனையும் சில அக்கிரமக்காரர்களின் சூழ்ச்சியால், காங்கிரஸ் அரசு மூடிவிட்டது. இதனால் கொஞ்ச நஞ்சம் இருந்த அரசின் ஆதரவு இழக்கப்பட்டது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளி உலகத்திற்கு 'சித்த மருத்துவம்' என்று ஒன்று உண்டு என்பதே தெரியாது. 1944-ல் இந்தியாவுக்கு வந்து 'இந்திய மருத்துவம்' பற்றி ஆய்வு செய்த, டாக்டர் **Prof: Henry E. Sigerist,** கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையில் கூறுகின்றார்.

"Prof. Sigerist advocates that In a country, such as India, a centre of studies in the history of medicine is more necessary than any where else, because in India ancient and mediaeval medicines are still alive and are practised on a large scale, it is no exaggeration to say that overwhelming majority of the people of India receive medical care only from Indigenous practitioners. They either follow the principles of the Ayurveda - the Science of longevity - as it developed in the Atreya school of Brahmin doctors over two thousand years ago or they are adepts of the Unani, or Greek school of medicines which actually is Arabo - Persian medicine - to mention only the two major systems".

இந்த அறிக்கையில், ஆயுர்வேதத்திற்கு முன்னுல் தோன்றி வாழ்ந்து வரும் சித்த மருத்துவம் பற்றி ஒரு வார்த்தைக் கூட இல்லை. அந்த அளவுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்டது.

சித்த மருத்துவம் பற்றிய இந்த இருட்டடிப்பு நிலை அண்மைக் காலம் வரை நீங்காமல் இருந்து வந்தது. இடைவிடாத கோரிக்கைகளாலும், கண்டனங்களாலும் ஐந்து ஆண்டுகட்கு முன்னர் தான் 'சித்த மருத்துவம்' பற்றிய உண்மையான செய்தியினை மத்திய அரசினர் உணர்ந்து, அதனை அங்கீகரித்தனர். அங்கீகாரம் செய்த பின்னரும் அந்த மருத்துவத்தை போதிய வளர்ச்சி பெறவெட்டாமல் தடுத்து வருகின்றனர் சில ஆயூர்வேத மருத்துவர்கள். இவர்களை ஆதிக்கவாதிகள் என்றே சொல்லலாம். அரசு அங்கீகாரம் செய்ததால் இந்த 'ஆதிக்கவாதிகள்' நேரடியாக சதிசெய்ய இயலவில்லை!

இன்று மத்திய அரசினரால் நடத்தப்படும் "Central Council of Indian Medicine" என்ற அமைப்பின் தலைவராயிருப்பவர் ஒரு ஆயூர் வேத மருத்துவர்; அரசியல் செல்வாக்கு மிக்கவர். இவர் அதிகாரத்தின் கீழ், சித்த மருத்துவர்கள் மூவர் ஆலோசனைக் குழுவாக அமைக்கப் பட்டுள்ளனர். இதில் டாக்டர். உத்தமராயன் தலைவர். துணைத் தலைவர், டாக்டர் V. S. பார்வதி அவர்கள். கோவை டாக்டர். சண்முகவேலு அவர்களும் இருக்கிருர்கள். டாக்டர் உத்தமராயன் அவர்கட்கு ஆயூர்வேதக்காரர்களுடன் இணைந்து, அவர்களுக்கு 'ஆமாம்' போடவே சரியாக இருக்கின்றது. சித்த மருத்துவத்தின் மீது போதிய உணர்ச்சி இல்லாத காரணத்தால் அவரால் டில்லியில் உள்ள ஆயூர்வேதக்காரர்களுடன் வாதாடமுடியவில்லை. ஒருவேளை அவர் வயது முதிர்ந்த காரணமாக இருக்கலாம். டாக்டர் பார்வதி அவர்களும் அப்படியே! கோவை டாக்டர் சண்முகவேலு அவர்கள் எவ்வளவு தான் வாதிட்டாலும், ஆயூர்வேத ஆதிக்கத் தலைவர்

பண்டிட். சிவசர்மா அவர்கள் கேட்பதில்லை. கேட்கும் அளவுக்கு பொறுமையோ, ஆர்வமோ கிடையாது. இந் நிலையில் மத்திய அரசு 'சித்த மருத்துவத்தை' அங்கீகரித்தும் புண்ணியமில்லாத நிலையில் சித்த மருத்துவம் விடுதலைக்குப் பின்னும் முழு ஆதரவு பெறவில்லை.

மத்திய அரசு ஆதரவு மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையில், மாநில அரசும் 'சித்த மருத்துவத்தினை' வளர்க்க ஒத்துழைப்புத் தரவில்லை. காரணம் காங்கிரஸ் ஆட்சியில், இம் மருந்துவம் பேரில் பற்றில்லாதவர்கள் தான் பதவியில் இருந்தனர்.

ஆனால் 1967-க்குப் பிறகு அமைந்த தி. மு. க. வின் ஆட்சியில் பல நூறு ஆண்டுகட்குப் பின்னர், சித்த மருத்துவம் ஆட்சியாளரின் ஆதரவினைப் பெற்றது. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் 'தமிழக அரசு' சித்த மருத்துவ வளர்ச்சியில் நன்கு கவனம் செலுத்தி வருகின்றது. சித்த மருத்துவத்திற்கென தனி இயக்குனர், கல்லூரி, மருத்துவ மனைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வருகின்றன. மேலும் 'தின மணி' யில் கடந்த 15 ஆண்டுகளாக 'நம் நாட்டு மூலிகைகள்' என்ற எமது 'சித்த மருத்துவ மூலிகை ஆய்வுக்' கட்டுரைகளைத் தொடர்ந்து வாசித்து வந்த மக்களிடையே, சித்த மருத்துவம் புதிய தொரு மறுமலர்ச்சியைப் பெறத் துவங்கியது. இன்று "மூலிகை மணிக்கு" என்று ஒரு இயக்கமே உருவாகி, சித்த மருத்துவ வளர்ச்சி யில் முழு உணர்வை வெளிப்படுத்தி வருகின்றது.

இவ்வளவு இருந்தும் என்ன பயன்?

ஆளுநர் அவர்களே!

வெளிப்படையாக 'சித்த மருத்துவம்' என்று கூறக் கூடாதாம்! 'சித்த மருத்துவ மனை' என்று பெயரிடக் கூடாதாம்! யார் இப்படி கூறுவது தெரியுமா? முன்னர் 'இருட்டடிப்பு' செய்து மறைத்தார் களே! அந்த ஆதிக்கவாதிகள்; ஆயுர்வேதக்காரர்கள்.

'சித்த மருத்துவம்' என்று அரசினர் நடத்தும் மருத்துவ மனைகட்குப் பெயரிடக் கூடாதாம்!

'சித்த மருத்துவ இயக்குனர்' என்று அரசு குறிப்பிடக் கூடாதாம்!!

'சித்த மருத்துவக் கல்லூரி' என்று பெயரிடக்கூடாதாம்.

அனைத்தும் 'இந்திய மருத்துவம்' என்றே அழைக்கப்பட வேண்டுமாம். ஏன் தெரியுமா?

'சித்த மருத்துவம்' என்று பெயரிட்டால் வெளி உலகினர் அதனை ஆய்வு செய்வார்கள். அதன் சிறப்புகள் வெளிப்படும். அதனை விட 'இந்திய மருத்துவம்' என்று குறிப்பிட்டால் ஏற்கனவே 'ஆயுர்வேதம்' என்பது தான் இந்திய மருத்துவம் என்று பரவலாக வெளி உலகத்தார் எண்ணியுள்ளது நிலைத்து விடும் என்ற கள்ள எண்ணத்தால் மத்திய அரசினருக்கு இன்னும் தவருன எண்ணத்தை உண்டாக்கி வருகின்றனர் இந்த ஆதிக்கவாதிகள்.

மாநில அரசுக்கும் இம மாதிரி 'சித்த மருத்துவம்' என்று பெயரை மாற்றினுல ; மத்திய அரசு நிதி உதவி அளிக்காது என கூறி பயமுறுத்தி; அமைச்சர் திரு. அன்பழகனுருக்கு உடன்பாடான இந்த பெயர் மாற்றத்தினை செயல்பட முடியாதவாறு தடை செய்து வருகின்றனர் ஆயூர்வேத ஆதிக்கவாதிகள்.

சித்த மருத்துவத்தின் இயல்பான வளர்ச்சியை, ஆயூர்வேதக் காரர்கள் தமது அதிகார, அரசியல் செல்வாக்கினுல் தடை செய்யப் பார்க்கின்றனர். இது வரை அவர்கள் அதில் வெற்றி பெறவில்லை. வெற்றி பெற்றதாக நினைப்பு இருக்குமேயானுல் அதனைப் பொய் என்று நிரூபிக்க நாள் நிச்சயமாகிவிட்டது.

ஆம்! இதோ உங்கள் பணியை நினைவூட்டுகிருேம்.

தமிழக அரசினரின் ஆதரவில் மலர்ந்து வரும் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமையும் வகையில்,

தமிழகத்தில் "இந்திய மருத்துவம்' என்ற பெயரில் வழங்கி வரும் அத்துனை அலுவலகங்களும், அலுவலக ஆணைகளும், "சித்த மருத்துவம்" என்ற பெயரால் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

அரும்பாக்கத்தில் இயங்கி வரும்

'அறிஞர் அண்ணு இந்திய மருத்துவ மனை' என்பதை
'அறிஞர் அண்ணு சித்த மருத்துவ மனை' என்றும்,

'இந்திய மருத்துவ மனை இயக்குனர் அலுவலகம்' என்பதை
'சித்த மருத்துவ மனை இயக்குனர் அலுவலகம்' என்றும்,

பாளையங்கோட்டையில் இயங்கி வரும்

'அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி' என்பதை
'அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி' என்றும்

உடனடியாக மாற்றுமாறு வேண்டுகிருேம்.

இம் மாதிரி மாற்றுவதில் ஆயூர்வேதத்திற்கு எவ்வித தடையும் இருக்க நியாயமில்லை. ஏனெனில் மற்றய மாநிலங்களில் இயங்கும் கல்லூரிகளும், நிறுவனங்களும் 'College of Ayurveda' என்றும், 'BOARD OF AYURVEDA', 'INSTITUTE OF AYURVEDA' என்று ஏற்கனவே

அரசினரால் அழைக்கப்பட்டு வருகின்றது. அங்கெல்லாம், 'INDIAN MEDICINE' என்ற பெயர் இருப்பதில்லை. 'இந்திய மருத்துவம்' என்றால் ஆயுர்வேதம் தான் என்ற எண்ணம் ஆழ்ந்து பதிக்கப் பட்டுள்ளதால் அதில் அவர்கட்குத் தடை இல்லை. ஆனால் தமிழகத்தில் அந்த 'INDIAN MEDICINE' என்பது தேவையற்றது. 'SIDDHA MEDICINE' என்ற பெயர்தான் "சித்த மருத்துவத்தினை" உலகிற்கு அறிவிக்கும். உலகம் அதனை அறியும் வாய்ப்பினைப் பெற வேண்டுமானால், 'சித்த மருத்துவம்' என்று பெயர் மாற்றியே தீரவேண்டும்!

சித்த மருத்துவத்தினை உலகறியச் செய்வதே உங்கள் பணி!

நீங்கள் மனப்பூர்வமாகத் தமிழைப் படிப்பது உண்மையானால், ஆயிரமாயிரம் வாசகர்களின் எண்ணப் பிரதிபலிப்பான இந்த 'பகிரங்க மடலின்' கருத்தினை, மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி உடனடியாக பெயரை மாற்றுங்கள். மாநில அரசு எந்த விதத்திலும் உங்களுக்கு எதிர்ப்பு தராது. ஏனென்றால் அமைச்சர் அன்பழகன் ஒரு தமிழ்ப் பேராசிரியர். சித்த மருத்துவம் பால் முழு நம்பிக்கையுள்ளவர். அவர் எவ்விதத்திலும் தடை சொல்லமாட்டார். டாக்டர் நாராயணசாமி என்ற ஒரு ஆயுர்வேதக்காரர் தான் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும். தாங்கள் அவருக்கு 'பெயர் மாற்றம் செய்வதால் எவ்விதத்திலும் ஆயுர்வேதத்திற்குத் தீங்கில்லை' என்று சொல்லி அவரையும் நம் பக்கம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இன்றிலிருந்து சரியாக நூறு நாட்கள் உங்கட்கு தவணையாகத் தருகின்றோம். மத்திய அரசிடம் வாதாடி நமது உரிமையைப் பெற முயற்சி செய்யுங்கள்.

அந்த நூறு நாட்களில் பெயரை மாற்ற முடியாவிட்டால்,

மூலிகை மணியின் ஆயிரமாயிரம் வாசகர்கள், 'வங்க நாட்டு மக்கள் இராணுவ அதிகாரத்திற்கு எதிராக எங்ஙனம் கொதித்தெழுந்தார்களோ, அங்ஙனம்

அரும்பாக்கம் 'அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை' யின் முன்னர், இன்றிலிருந்து (ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து) 10-வது நாள் கூடுவார்கள். அங்கிருக்கும்

'இந்திய மருத்துவ மனை' என்ற பெயர்ப் பலகையை உடைத்தெறிவார்கள்!

'சித்த மருத்துவ மனை' என்ற தமிழ்ப் பெயர் பலகையை அவர்களே பொருத்துவார்கள்.

"எப்படியும் இந்த போராட்டத்தை நடத்தியே தீருவோம்" என்று எமது வாசகர் வட்ட உறுப்பினர்கள் வேட்கையுடன் காத்து இருக்கின்றனர். இன்றிலிருந்து சரியாக 101-வது நாள் பெயர் மாற்றப்பட்டிருக்கும்.

"இந்தப் பெயர் மாற்றம் எங்களால் போராடி செய்வதை விட, அகத்தியர் போல் விளங்கும் தாங்கள் மத்திய அரசுடன் வாதாடி செய்வது சிறப்பாகும்.

சித்த மருத்துவத்தின் மறுமலர்ச்சிக்கு நீங்கள் செய்யும் இந்த நற்பணி தமிழ்க் கலைக்குச் செய்யும் புனிதப் பணியாகும். இதனைச் சாதித்து விட்டால், தமிழ் உள்ளளவும் உங்கள் பெயர் நிலைபெறும்.

"அகத்தியர் தமிழகம் வந்து தமிழ்ப் படித்து 'அகத்தியம்' என்ற இலக்கண நூலைப் படைத்து அழியாப் புகழ் பெற்றார்."

அவருக்குப் பின்,

"ஆளுநர் கே. கே. ஷா தமிழகம் வந்து தமிழ்ப் படித்து தமிழ் மருத்துவம் புத்துயிர் பெற 'சித்த மருத்துவம்' என்று உலகெலாம் அறிய பெயர் சூட்டினார்" என்று எதிர்கால இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் உங்களைப் புகழ்ந்து எழுது வார்கள்.

ஏன்! உங்கள் தமிழாசிரியர், டாக்டர் சி. பாலசுப்பிரமணியர் ஒரு தமிழிலக்கிய வரலாறு எழுதியவராயிற்றே! அவரே எழுதுவார். தம் மாணவர் (ஆளுநர்) செய்த அந்த நற்பணியை (பெயர் மாற்றம்) போற்றி அவர் எழுதும் நாளை விரைவில் உண்டாக்குவீராக!

வணக்கம். நன்றி!

இன்னணம்,

ஆ. இரா. கண்ணப்பர்,
(மூலிகை மணி வாசகர்கள் சார்பாக)
ஆசிரியர்: மூலிகை மணி, வேலூர். (வ. ஆ.)

குறிப்பு:— உங்களுக்கிருக்கும் பல்வேறு அலுவல்களுக்கிடையே 'பெயர் மாற்றம்' பற்றிய 100 நாட்கள் கெடுவினை தாங்கள் மறக்கக் கூடாது என்று தினம் ஒரு 'நினைவூட்டு மடல்' (Reminder Letter) மூலிகை மணி அலுவலகத்திலிருந்து வரும்.

மறவாது பெயர் மாற்றப் பணியினை இன்றே மத்திய அரசுக்கு எழுதி வாதாடி நிறைவேற்றுங்கள்.

இந்த மடலைப் படிக்கும் போதே ஒருநாள் கழிந்து விடும். இன்னும் 99 நாட்களே உள்ளன "பெயர் மாற்றும் போராட்டம்" துவக்க என்பதை நினைவூட்டுகிறோம்.

உ
முருகா.



[இப்பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்பட மாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி — பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்க பட மாட்டாது. கூடியவரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்.]

* * *

கே: வெண் குட்டம் என்பது என்ன? இது தொத்து வியாதியா? தொழு நோயும், வெண் குட்டமும் ஒரே வகையைச் சேர்ந்ததா? இந்நோய் சில வயது வந்த பெண்களுக்கும் உள்ளதே? ஒரு சிலருக்கு தலை முதல் பாதம் வரை ஒரே வெண்மை கலந்த மஞ்சள் நிறமாக உள்ளதே?

ப: வெண் குட்டம் என்பது சர்மம் வெளுத்துப் போதல். இது பலவித காரணத்தால் உண்டாகக் கூடியது. 'வெண் குட்டம்' என்ற தலைப்பில் தொடர்கட்டுரையை தாங்கள் படிக்கவில்லை போல் தெரிகிறது. அந்த தொடர்கட்டுரையினை தனி நூலாகத் தொகுத்து விரைவில் வெளியிடுவோம். பலருக்கும் பயன் தரக் கூடியது வெளியாவதை நமது மூலிகை மணியில் தெரிவிப்போம்.

கே: பற்கள் வெண்மை நிறமாக இருப்பது நல்லதா? அல்லது வெளிர் மஞ்சள் நிறமாக இருப்பது நலமா?

ப: பற்கள் அவரவர் உடல் தன்மைக்கு ஏற்றவாறு பழுப்பு நிறமாகவோ அல்லது வெண்மை நிறமாகவோ இருத்தல் கூடும். இதனுல் நன்மை தீமையை அறிய முடியாதே!

கே: சுத்தமான மழைத் தண்ணீரை அருந்துவதால் ஏதேனும் நோய்கள் தீருமா?

ப: சுத்தமான மழை நீரால் நுரையீரல், கல்லீரல், மண்ணீரல் தூய்மையாகும்.

கே: ஐயா, என்னுடைய பெண் குழந்தைக்கு வயது 2 (இரண்டு) ஆகிறது. குழந்தை குச்சியைக் கொண்டு காதில் குத்திக் கொண்டது. காதிலிருந்து சீழ் வடிகிறது. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறுங்கள்.



வேளைக் கீரை

ப: இதற்கு கருஞ்செம்பை இலைச்சாறு 2 துளி பிழிந்து காதுகளில் விட்டுவர சீழ் நிற்கும்.

கே: ஐயா! என் வயது 25. சுமார் நான்கு வருடத்திற்கு முன் மாலைநேர பொறியியல் படிப்பில் சேர்ந்தேன். அப்பொழுது மாலை 6-மணி முதல் 9-மணி வரை வகுப்பில் படித்துவிட்டு, இரவு சாப்பாடு சாப்பிட்டுவிட்டு மீண்டும் 10-முதல் 1-மணி வரை படித்துவிட்டு படுப்பேன். காலையில்

ஐந்தரை மணிக்கு எழுந்து படித்துவிட்டு, ஏழரை மணிக்கு வேலைக்குச் செல்வேன். இதனால் எனது தூக்கம் கெட்டு அடிக்கடி ஒற்றைத் தலைவலி ஏற்பட்டது. 4 மாதங்கள் படித்த பிறகு படிப்பை விட்டு விட்டேன். ஆனால் ஒற்றைத் தலைவலி என்னை விடவில்லை. நான் 13 வருடங்களாக மூக்கு கண்ணாடி அணிந்து வருகிறேன். எத்தனையோ ஆங்கில டாக்டரிடம் காண்பித்தும் குணம் காணவில்லை. இப்போது தலை முடியும் உதிர ஆரம்பித்துள்ளது. இதிலிருந்து விடுபட எனக்கு ஒரு முறை கூறி பூரண குணம் பெறச் செய்யுங்கள்.

ப: உனக்கு தலைவலி வரக் காரணம், ஆங்கில மருந்து, ஊசிகள் தான். முதலில் அவைகளை நிறுத்த முறிவு மருந்து 10 நாள் சாப்பிடு. பிறகு, வேளை கீரையை அரைத்துப் பிழிந்து சக்கையை தலையில் கட்டி 15 நிமிடம் கழித்து எடுத்துப் பிழிந்தால் நீர் வரும் இப்படி 7 நாள் செய்யவும். திரைப் படத்தை வருடத்திற்கு ஓரிரு முறை கூட பார்க்காதே! இரவில் 9 மணிக்குமேல் படுத்துவிடு, விடியற்காலை 4 மணிக்கு எழுந்து தலை முழுகு. தலை முடியை ஒட்ட வெட்டிக்கொள். எந்த காரணத்தைக் கொண்டும் இரவு கண் விழிக்காதே! தலைவலி நிச்சயம் நீங்கிவிடும் கவலைப் படாதே!

நன்றி அறிவிப்பு!

கடந்த சனவரித் திங்கள் 28, 29, 30 ஆகிய மூன்று நாட்களும் கோவைக் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் சீரும் சிறப்பாக நடைபெற தங்களது சொந்த நலன்களையும், அலுவல்களையும் துறந்து உடலாலும், உள்ளத்தாலும், பசிநோக்காது, கண் துஞ்சாது உழைத்த கோவை மாவட்ட வாசகர் வட்ட அன்பர்கள், திருவாளர்கள், ப. சத்திய மூர்த்தி, ஹனிபா, அரங்கசாமி, இலட்சுமணன், முனிசாமி, ரங்கையன், பிரான்சிஸ்சேவியர், சந்திரன், மாரண்ணன், மற்றும் அங்கத்தினர்கட்கும், போத்தனூர் வாசகர் வட்ட அன்பர் திரு. S. ராமச்சந்திரன், பிரகாஷ் அவர்களுக்கும் நகர வட்டத்தின் திரு. S. ராமகிருஷ்ணன் அவர்கட்கும் அங்கத்தினர்கட்கும் வாசகர்கள் சார்பில் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மூன்று நாட்களும் ஆசிரியருடன் நிழலாக இருந்து தொண்டனுகவே மாறிவிட்ட கோவை அன்பர், சதாசிவம் அவர்கட்கும் எமது இதயங்கனிந்த நன்றி.

வாழ்க அவர்களின் திருவுள்ளம்!

கே: ஐயா, என்னுடைய அண்ணுவுக்கு வயது 50. அவர் அடிக்கடி வயிற்றில் எரிச்சல் இருக்கிறது என்கிருர். அசதியும் காணப்படுகிறது. மிகவும் மெலிந்து காணப்படுகிருர். தயவு செய்து தாங்கள் தான் ஆலோசனை கூறவேண்டும்.

ப: வயிற்றில் எரிச்சல் இருப்பது பித்த நீர் மிகுதியானுல் உண்டாகும். காலையில் எலுமிச்சம்பழச் சாறு, சீரகம், தேன் கலந்து இஞ்சி ரசமும் சிறிதளவு சேர்த்து வெறும் வயிற்றில் அருந்தவும். இப்படி 10 நாள் போதும் எரிச்சல் அடங்கிவிடும். 10 நாளில் அடங்கவில்லையானுல் இங்கு நேரில் வந்து, கை நாடி காண்பித்து தக்க ஆலோசனை பெறலாம்.

கே: கல்லிலும் தேரை இருப்பதாகச் சொல்லுகிருர்கள். கல்லினுள் உள்ள தேரை நீண்ட காலம் எப்படி உயிர் வாழ்கிறது. கல்லினுள் காற்று இருப்பதுகூடச் சந்தேகமே! அல்லது சமாதி யோகத்தின் மூலம் உயிர் வாழ்கிறதா?

ப: இறைவன் திருவருட் சக்தி. கருப்பையில் உள்ள உயிர்களுக்கு எப்படி உணவும் காற்றும் செலுத்தி வாழவைக்கிருரோ, அத்தன்மை போன்றுதான், கல்லினுள் தேரைக்கு காற்றும் உணவும். கல்லின் உள் தேரை யிருக்கும் போது காற்று மட்டும் கல்லில் புகாதா என்ன? நம் கண்களுக்குத் தெரியாதனவற்றை இல்லை என்று நாம் சொல்லிவிட முடியுமா? என்ன? உயிராய் பிறந்த ஒவ்வொரு ஜீவனும் ஒரு யோகம் செய்துதான் பதவி பெறுகிறது!

கே: ஐயா! தாங்கள் அருகம்புல் பற்றி 'தினமணி சுடரில்' எழுதியதையும் பார்த்தேன். பிறகு தங்களிடம் வருவோர்க்கெல்லாம் ஆங்கில மருந்துகள் முறிவதற்கும், நஞ்சுக்கடிகள், பாஷாண முறிவுகட்கெல்லாம் இந்த அருகம்புல்லையே உபதேசித்து முறிவு செய்து விடுகிறீர்கள். இதனுல் தமிழகத்திலேயே உங்களுக்கு 'அருகம்புல் டாக்டர்' என்ற பெயரே நிலைத்து விட்டது. தீராத பல கொடிய வியாதிகட்கு எல்லாம் 5, 10, 15, 20-நாள் என கைநாடிப் பார்த்து அருகம்புல் முறிவு சாப்பிட்டு வரச்சொல்லிப் பின்புதான், தங்கள் மருந்தை ஆரம்பிக்கிறீர்கள் என்பதை என் நண்பர் ஒருவர் சொல்லக் கேட்டேன். எனவே இந்த அருகம்புல் பெருமையை எடுத்துக்காட்டும் பாடல் ஒன்ருேடு அன்புகூர்ந்து விளக்குவீர்களா?

ப: அன்பரே! அருகம்புல் மகிமையைப்பற்றி கேட்ட உங்களுக்கு எந்த ஆதாரத்தைக் காட்டினால் நம்பிக்கைக் கொள்ளுவீர். இப்பொழுது உலகம் எதையும் கண்கண்ட ஆதாரம் இல்லாமல் ஒப்புக் கொள்ள மறுக்கிறது. அருகம்புல் பற்றி நன்கு நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பினால் உரை நடையில் எழுதிய நமது நாட்டின் "விநாயகர் புராணம்" படியுங்கள். முதன் முதலில் அதைத்தான் நான் படித்தேன். படித்துவிட்டு ஓகோ இது "புராண புளுகு" என்று இந்தகால படிப்பாளிகளைப் போல காற்றில் விட்டுவிடவில்லை! தமிழகத்தில் மூலிகை மணிக்கும் — கண்ணப்பனுக்கும் கிடைத்த பெயர் புகழ் எல்லாமே இந்த அருகம்புல்லுக்குத்தான்! வல்லவனுக்கு புல்லும் ஆய்வுதாம் அல்லவா? ஏட்டுச் சுவடிகளில் இருந்தென்ன பயன்? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.

அதுபோல என்னிடம் வருவோர் எல்லாமே நான் சொல்வது போல் அருகம்புல்லைச் சாப்பிட்டு மீண்டும் வருகிறார்களா? அதுதான் இல்லை. என்னமோ இவர் அதிசயமாக சொல்லிவிட்டார் அருகம்புல்லை! எனக்குத் தெரியாதா? அருகம்புல். மாடு தின்னுவதை மனுஷாள் தின்னுவாளா? என்று கூறி போய்விடுபவர்களும் உண்டல்லவா? போற்றுவதையும், தூற்றுவதையும் ஒன்றாக நினைப்பவன் நான். நீங்கள் கேட்ட ஆதாரத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு இதோ, "நஞ்சுண்டசிவன் அன்று கொண்ட கல்பம்

நந்தனார் சடைமீது தரித்த கல்பம்
பஞ்ச கணபதியின் மூலஅருகு இதப்பா
பார்த்தாக்கால் இதனருமை பகரவொண்ணாதே!"

கல்பம் எனக் கூறுகிறார். (ஆதாரம்: அகத்தியர் பன்னீராயிரம்)



வாழ்க! வளர்க!!

கடந்த 2 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் 'மூலிகைக் கண்காட்சி' களில் இடம் பெற்ற மூலிகைகளின் வரைப்படங்களை அழகுற வரைந்தும் விளக்கவுரைகளைத் தெளிவாக எழுதியும் ஒத்துழைத்து வரும் இளைஞர்,

திரு. விசுவநாதன் அவர்கள்

சென்னையில் உள்ள அரசினர் கலைத் தொழில் நுட்பக் கல்லூரியில் படித்துகொண்டே ஓய்வு நேரப் பணியாக இவைகளை செய்து வரும் இவர் பணி வாழ்க! வளர்க!!

மூலிகை மன்னர் வரலாறு

[க. வெங்கடேசன், B.SC., (M.A.)]

— முன் மாதத் தொடர்ச்சி

திருமணத்திற்கு இன்னும் இரண்டே நாட்கள் தான்! ஆயினும் மணப்பெண் வேலூருக்கு வரவில்லை. வாலாசாப்பேட்டையில் தன் சித்தப்பா வீட்டில் வளர்ந்து வருகிருள் மணப்பெண் சகுந்தலா. அவளது சித்தப்பாவுக்கும் — சித்திக்கும் இந்த திருமண ஏற்பாட்டில் விருப்பமோ, உடன்பாடோ இல்லை! ஜீவரத்தினம்மாள் வேலூருக்கும் - வாலாசாப்பேட்டைக்கும் அலைந்தார்கள். பெண்ணைப் பெற்ற தந்தையும், திரு. சம்பந்தமும் நேரே சென்று பெண்ணை அனுப்பக் கோரினுர்கள் ; அப்படியும் அவர்கள் அனுப்பவில்லை.

இறுதியாக மண நாளும் வந்தே விட்டது. திரு. சம்பந்தமும் மற்ற உறவினர்களும், வாலாசாப்பேட்டை போலீசாரிடம் திருமணப் பத்திரிகையினைக் காண்பித்து அவர்களது ஒத்துழைப்புடன் மணப் பெண்ணான சகுந்தலாவை வேலூருக்கு அழைத்து வந்தார்கள். "திருமணம் நடக்குமா ?" என்று கலங்கிய கண்ணப்பனின் மனம், "மணப்பெண் வந்து விட்டாள்" என்ற செய்தி கேட்டு, — முஜிபுர் ரஹ்மான் விடுதலை அடைந்ததைக் கேட்ட வங்க நாட்டு மக்கள் அடைந்த மகிழ்ச்சியை அடைந்தது.

கோயில் திருமணம்

ரங்காபுரம் என்று வேலூரிலிருந்து ஆற்காடு போகும் வழியில் 6 கல் தொலைவில் ஒரு புராதன கோயில் இருக்கும் ஊர். அந்த ஊர் மத்தியில் ரங்கநாதர் ஆலயம் இருக்கிறது. வைணவர்கள் கட்டிய கோயில் ; அடுத்து அலமேலுமங்கைக்கும் ஒரு கோயில் கட்டியிருக்கின்றனர். ரங்காபுரத்தில் ரங்கநாதர் திருப்பள்ளிக்கொண்ட காட்சியும், அலமேலு மங்கை கோயிலும் உள்ள கிராமங்கள் முறையே ரங்காபுரம், அலமேலுமங்காபுரம் என்ற பெயரில் இருக்கும் கிராமங்களாகும். வேலூர் — ராயர் வமிச அரசர்கள் ஆண்டபோது இந்த தலங்கள் மிகப் பிரசித்தி வாய்ந்த ஊர்களாக இருந்தன. இன்றும் ஆண்டு தோறும் உற்சவங்கள் நிகழ்ந்து தான் வருகிறது.

சித்திரை மாதம் வளர்பிறை நாள். கதிரவன் அன்று சற்று முன்னதாகவே தனது பொற்கிரணங்களை வெண்முகில்கட்கிடையே நீட்டி புறப்பட்டான். மேற்கூறிய ரங்காபுரம் சாலைஓரத்தில் கோயில் தர்ம சத்திரம் ஒன்று இருந்தது. அதில் தான் திருமணக் குழுவினர் தங்கியிருந்தனர். 'கண்ணப்பன் — சகுந்தலா' திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தது. அலங்கார விளக்குகள் இல்லை! ஆனுல் ஆதவனின் பொற்கிரணங்கள் முன்னதாகவே சத்திரத்தில் நுழைந்து திருமண மண்டபத்திற்கு ஒளி தந்தது. கெட்டி மேளம் கொட்டி முழங்கவில்லை! ஆனுல் குயிலும்வானம்பாடியும் பண்ணிசைத்தன. மணப்பெண் மணமேடைக்கு அழைத்துவரப்பட்டாள். சிவந்தமேனி பயந்த சுபாவம் என்று முகம் தெளிவாகக் காட்டியது. கண்ணப்பன்

உழைத்து உருவாக்கிய ஒருஜதை வெள்ளைக்கல்தோடு அவள் காதில் மின்னியது. மற்றபடி கைகளில் கண்ணாடி வளையல்தான்! 64 அணிகளும் அவள் அணிந்திருக்கவில்லை. ஆனால் மங்கல அணியாகிய குங்குமத்தை அணிந்திருந்தாள். அதுவே மணியானதோர் அணியாகித் தனி அழகைத் தந்தது. மணமேடையில் பெண் அமர்ந்தாள் பக்கத்தில் ஏற்கனவே அமர்ந்திருந்த கண்ணப்பன் எந்த அளவுக்கு எளிமையாகக் காட்சி அளிக்க முடியுமோ, அந்த அளவுக்கு எளிமை அவர் தோற்றத்தில் இருந்தது. ஆனால் உள்ளம் வலிமை என்பதை அவரது தீட்சண்யமான பார்வை உணர்த்தியது.

மாவிலைத் தோரணங்கள் காற்றில் சலசலக்க, வாழைமரத்தில் இருந்த வாழைப்பூ காற்றில் அசைய, மா முது பார்ப்பான் மறையோத உற்றாரும் உறவினரும் வாழ்த்துக்கூற மங்கலநாணினை கண்ணப்பன் ரங்கநாதர் ஆலய சந்நிதானத்தில் மணமகள் சகுந்தலா கழுத்தில் அணிவித்தார்.

வளர்ப்பு அன்னையான ஜீவரத்தினம்மாளின் திருப்பாதங்களில் மணமக்கள் வீழ்ந்து ஆசி பெற்றனர். எளிய விருந்து முடிந்தது. வந்தோரனைவரும் ஊர் திரும்பினர். மணமக்களும் ஊர் திரும்பினர்.

கண்ணப்பனை வளர்த்த தாய்வீடு ஏழை என்றால், மணந்த சகுந்தலாவின் வீடோ பரமஏழை! ஏழைக்கு ஏழைதானே ஆறுதல் கூறமுடியும். எனவே, அவர்கள் காஷ்மீர் என்றும், ஊட்டி என்றும் சென்று மணவாழ்வின் மகிழ்வைத் துய்க்கவில்லை. வேலூரிலேயே ஒரு சிறு வீட்டில் ஒண்டுக் குடித்தனமாக குடிபுகுந்து, தமது புதிய வாழ்வைத் துவக்கினர்.

ஆறுமாத காலம் புதிய வாழ்வு புதுமையாகவே காட்சியளித்தது கண்ணப்பனுக்கு. அனைவரும் மகிழ்ச்சியோடுதான் எளிமையாக வாழ்வு நடத்தினர். எதிர்பாரதவிதமாக அச்சகவேலையினின்று கண்ணப்பன் நின்று விட்டார். தொழில் போட்டி தான் காரணம். நேர்மையாக நடக்க விரும்பிய கண்ணப்பனை அச்சகத் தொழில், நிலைபெற விடவில்லை.

'பழைய குருடி கதவைத் திறடி' என்பதுபோல். மறுபடியும் பிளாட்பார வாழ்விற்குச் செல்லவேண்டிய நிலை அவரை நெருங்கிவர தொடங்கியது. முன்பு தனியாக அவ்வாழ்வை அனுபவித்தார்—தற்போது மனைவியுடன் அனுபவிக்க வேண்டுமே என்ற துயரம் நெஞ்சை அழுத்தியது. சென்னைக்கு அடுத்த தாம்பரத்திற்கு குடி புகுந்தார் மனைவியுடன். குடிசை ஒன்று புகலிடம் கொடுத்தது. கையில் இருந்த சில்லரைப் பணத்தில் சோடாக் கடையொன்று வைத்தார். தாம்பரத்தில் கிறித்தவக் கல்லூரி கட்டப்பட்டிருந்த

நேரம். இராணுவ விமானதளம் நடந்து வந்ததால், சோடா வியாபாரம் ஆரம்பத்தில் சற்று சூடு பிடித்தது. அன்றாட வயிற்றுப் பிரச்சனை ஒருவாறு தீர்ந்தது.

இந் நிலையில், சகுந்தலா தாய்மை அடைந்தாள். நாட்கள் வாரங்களாகியது; மாதங்களாகியது. தலை பிரசவம், முதல் குழந்தை, பூ முடிப்போ, சீமந்தமோ, ஏதுமின்றி முதல் மகளாக, மூத்த மகளாக பெண் குழந்தையை சகுந்தலா ஈன்றாள். கண்ணப்பனுக்கு தான் தந்தையாகி விட்டதில் ஏகப்பட்ட மகிழ்ச்சி. எதிர்பட்டவர்களிடம் எல்லாம் தான் தந்தையாகி விட்டதைச் சொல்லி அகமகிழ்ந்தான். அரசனாக இருந்திருந்தால் பரிசுகளை அள்ளிக் கொடுத்திருப்பான். ஆண்டியாகத்தானே அவன் வாழ்வு அமைந்து விட்டது. எனவே, தனக்கு மகள் பிறந்த மகிழ்ச்சியை எப்படியாவது கொண்டாடித் தீர்ப்பது என்று முடிவு கொண்டான். தனக்கு வருவாயைத் தந்து கொண்டிருக்கும் சோடா வியாபாரத்திற்கு தன் மகள் பெயரையே சூட்டிவிட்டான். இதுவரை எந்தவித பெயரும் இன்றி நடந்துவந்த சோடா வியாபாரம், பெண் குழந்தை பிறந்த 10-வது நாள் முதல், "வசந்தா சோடா பாக்டரி" என்று தன் மூத்த மகள் பெயரையே தன் தொழிலுக்குச் சூட்டி மகிழ்ந்தார் அந்த தந்தை. ஆம்! அவர் மூத்த மகள் செல்வி வசந்த கோகிலம் என்ற பெயருடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளரத் தலைப்பட்டாள். ஆனால் சோடா வியாபாரத்தில் போட்டி காரணமாக, வருவாய் குறைய ஆரம்பித்து இறுதியில் அந்த தொழில் படுத்தே விட்டது. முழுச் சாப்பாடு அரைச்சாப்பாடாகி, ஒரு நாள் அதுவும் இல்லாமல் போய் விட்டது.

பெற்ற தாயும், சேயும் பட்டினி கிடப்பதைக்கண்டு நின்றிருக்க வில்லை கண்ணப்பன். தாம்பரத்தில் கட்டப்பட்டு வந்த விமான தளத்திற்கு கூலி வேலை செய்ய சென்றான். சீமை ஓடுகளையும், செங் கற்களையும் தூக்கிச் சென்று தினம் எட்டணா சம்பாதித்தான். அன்று அவர் சம்பாதித்த எட்டணாவில், மூன்று உயிர்கள் வாழ்ந்தன. கடுமையான உழைப்பினால் எட்டணா, முக்கால் ரூபாயாக மாறி, ஒரு ரூபாயாக மாறியது.

கண்ணப்பன் கூலி வேலையை ஒழுங்காகச் செய்வதை கூர்ந்து கவனித்தார் 'ஜான்' என்ற மலையாள மேஸ்திரி ஒருவர், ஒருநாள் "கண்ணப்பா! நீ இனிமே செங்கல் தூக்க வேணாம்! சிமெண்ட் மிக்சர் மிஷின் ஓட்டக் கத்துத்தரேன்! அதை ஓட்டு! வாரம் ரூபாய் பதினைந்து தரேன்" என்று சொன்னார்.

(தொடரும்)

சித்தர் இலகு மருத்துவம்

— முன் மாதத் தொடர்ச்சி

எல்லாவித மேக நோய்களும், குட்ட நோய்களும் போக

"பரங்கிப்பட்டை இரசாயனம்"

"பட்டைதனைத் தூளாக்கி அஞ்சுபலந்தா னெடுத்துக்கொண்டு
பகருமதிவிடயங் குரோசானி யோமம் கட்டை

யெனுஞ்சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு சுக்கு திரிபலை
நன்மிளகு சேர்த்து தட்டைபண்ணி வகைக்கு

பலம்கால்தான் தளராட்டிப் பாண்டத்தில் வழித்துநீயும்
இட்டமுடன் பட்டைத்தூளஞ்சு பலமும் கூடச்

சேர்த்து இவையெல்லாமாகச் சேர்ஆவின் பாலில்ஓர்
பதமா ஊற்றிவைத்து இதங்கேளு கமல

வன்னி கடிகை யொன்று வெந்திடவே
விடாமல் கிண்டி கிண்டி பதங்கேளுமயனம்

போல்பக்குவத்தை பார்த்து பற்றும்விளக்கி மைந்தாகேளு
மதங்கேளு ஆறுபலஞ்சீனி தூக்கி மறுபடியும்

கப்பையால் சீனிகிண்டே சீனியிட்டுக் கிண்டி
யொருகலசத் திட்டுத் தினமூன்று சென்றபின்பு

தான்றிக்காய் போல திறமாக செய்துவைத்த
மருந்தைவாங்கி திரட்டியே இருவேளை தின்றபோது

தீருகின்ற நோய்கேளு கிராணிசூலை பரங்கி
மயன்ற வெண்குட்ட ம் கருங்குட்டம் சிரசில்

வரும்சூலையும்போம் சாலைபோல் வெடிசூலை நெஞ்சு
சூலை தட்டிமிதித் தொடித்தாற்போல் சரீரசூலை

சீலம்போம் கழல்வாதம் தந்தவாதம் தீரும்
தீயெரிக்கும் விலாவெலும்பு வீக்கம் சோகை

வாங்குடனே முடக்கிவிடும் முடச்சூலை பக்கசூலை
கரப்பானொடு கடுவனு முதலனைத்தும் கழன்றுபோமே"

— (கு. மு. காவியம்)

இதற்குப் பத்திய விளக்கம் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

(தொடரும்)

சந்தா அன்பர்களுக்கு மட்டும்

நமது ஆசிரியர் அவர்கள் பலர் வேண்டுகோளுக்கிணங்க சில முக்கிய மருந்துகளை மட்டும் தனது மேற்பார்வையிலேயே தயாரிக்க இசைந்துள்ளார். இந்த இதழிலேயே சிலவற்றைப் பற்றி அறிமுகம் செய்துள்ளோம். சந்தாதாரர் ஆக இல்லாதவர்கள் முதலில் சந்தா ரூ. 6—00 சேர்த்து மணியார்டர் அனுப்பினால் தான் மருந்துகளை அனுப்பிவைக்க இயலும்.

கற்பக மிளகுப் பொடி

குழந்தைகளுக்கு வரும் எவ்விதமான நோய்களுக்கும் குறிப்பாக மாந்தை, இழுப்பு, இளைப்பு, இருமல், கபக்காய்ச்சல்களுக்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 3—00

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெ ஸ்நானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலைமுடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் 1 முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை ரூ. 2—50

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபகமறதி, வழுக்கைத்தலை, அதிகஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

முசுமுசுக்கை தைலம்

தலைக்கு தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகாலரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காசநோயுடையவர்களுக்கு ஏற்றது

ஒரு புட்டி விலை ரூ. 4—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும், பல் தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை 0—30 காசு.

காது நோய் எண்ணெ

காதில் சீழ்வடிதல், இரத்தம் வருதல், காதுவலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 2—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு இத்துடன் தபால் சிலவு ரூ. 2—05 சேர்த்து கீழ்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர்,**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

தலைவலி மாத்திரை

எந்தவிதமான தலைவலி வந்தபோதிலும் ஒரு மாத்திரையை சுடு நீரில் உரைத்து தலைக்குப் பற்று போட்டுவிட வலியெல்லாம் குறைந்து நீர்குற்றம் முதல் எல்லா வலிகளையும் அறவே போக்கும். சித்தர் இலகு மருத்துவத்தில் இம்முறை கூறப்பட்டுள்ளது.

25 மாத்திரை விலை ரூ. 2-50

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணி கீரையால் முறைப்படி தயாரித்தது. கண் ஒளிக்கும் பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக்கொள்ளவும் ஏற்றது.

1 புட்டி விலை ரூ. 4-00

மூலிகைக் குடிநீர்

காலரா, விஷஜுரம், பேதி, வாந்தி, சீதபேதி, இரத்தபேதி ஆகியவைகளை நிறுத்த வல்லது.

1 புட்டி விலை ரூ. 2-00

தாளிச கலவைப் பொடி

பழங்கால முறைப்படி தயாரித்தது. சாதாரண காய்ச்சல் முதல் எந்தவிதமான நோய்களுக்கும். குழந்தை முதல் பெரியோர் வரையில் தேன், நெய், வெண்ணை, வெந்நீர் போன்ற அனுபானங்களில் கலந்து பயன்படுத்தலாம்.

1 பாக்கெட் விலை ரூ. 3-00

ஞாபக சக்திக்கு

வல்லாரைத் திப்பிலி!

இளம் மாணவ மாணவியர்களுக்கு இரவில் படிப்பது பகலில் மனதில் தங்குவதில்லை என கவலைப்படுவோர்கள் குறை நீங்க, ஆசிரியர் கண்ணப்பர் அவர்களால் தயார் செய்யப்படும் "வல்லாரைத் திப்பிலியை" வாங்கி முறையே 40-வேளை சாப்பிட ஞாபகசக்தி வளர்வதுடன் அறிவு விருத்தியும், சுறுசுறுப்பும் ஏற்படும். ஞானசாதன மூலிகையான வல்லாரைச் சாற்றில் தயாரிக்கப்படும் வல்லாரைத் திப்பிலி வேண்டுவோர் ரூ. 5-50 மணியாடர் அனுப்பி பதிவு பார்சலில் பெறலாம்.

மூலிகை அகராதி

— முன் மாதத் தொடர்ச்சி

காட்டுச் சாதிக்காய்

வேறு பெயர்கள் : காடு ஜாதிக்காய், ஆங்கிலம் : மைரிஷ்டிகா மலபாரிகா, ஒயில்ட் நட்மெக், தெலுங்கு : அடவி ஜதி காயா, மலையாளம் : காட்டு ஜாதி காய, கன்னடம் : கானகி ஜத்னிகாய், சமஸ்கிருதம் : காமுக், பர்ஷியா : ஜாஸ்பாய டோஸ்தி, இந்தி : ஜங்லி ஜாய்பால்.

விபரம்

இது கேரளம், மைசூர், குடகு ஆகிய மலைக்காட்டு பிரதேசங்களில் வளரக்கூடியது. சாதாரண சாதிக்காயை விட அளவு பெரிது ; ஆனால், குணம் மணம் குறைவு.

உபயோக உறுப்புகள்

காய், விதை, இலை.

சுவை :- கைப்பு, துவர்ப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு.

குணநிசயம்

உடல் உரமாக்கி, வாதமடக்சி, துவர்ப்பி, வெப்பமுண்டாக்கி.

காட்டுத்தும்மட்டி

வேறு பெயர்கள் : காட்டு கொம்மட்டி, ஆங்கிலம் : பிட்டர் கோர்டு குகூமிஸ்டிகோனஸ், தெலுங்கு : அடவி-புச்சா, மலையாளம் : காட்டுக் கொம்மட்டி, கன்னடம் : ஹால்மெக்கி, சமஸ்கிருதம் : விஷாலா, இந்தி : ஜங்கிலி இந்திரயான்.

விபரம்

கொடிவகுப்பைச் சார்ந்த இம்மூலிகை சாதாரணமாகக் கிடைக்கக் கூடியதாகும். ஆனுல், இதன் காய் பச்சை நிற மாகவும், வரிசை வரிசையாக வெள்ளைக் கோடும் இருக்கும். கடுமையான கைப்பு ருசியை உடையதாகும் இதன் காய்.

உபயோக உறுப்புகள்

காய், வேர்.

சுவை :- கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு.

குணுநிசயம்

நுட்புழுக் கொல்லி, பூச்சிக்கொல்லி, நீர்மலம் போக்கி, குளிர்ச்சியுண்டாக்கி, கைப்பு உண்டாக்கி, வீக்கம் கரைச்சி, பைத்திய தோடம் போக்கி, மலமிளக்கி.

காட்டுப் பாகல்

வேறு பெயர்கள் : பழுபாகல், ஆங்கிலம் : மோமோர்டிகா டியாய்கா, தெலுங்கு : கார்கோடகி, மலையாளம் : வெம்பாவால் கன்னடம் : மதஹாகால காயி, சமஸ்கிருதம் : வஹாஸ்ஸா, இந்தி : டார்கரில்லா.

விபரம்

கிழங்கு உடைய பாகல் காய் இனத்தைச் சேர்ந்தது. தன்னிச்சையாகவே இது காடுகளில் தன் இனத்தை பெருக்கிக் கொண்டு விடும்.

உபயோக உறுப்புகள்

இலை, காய், வேர், கிழங்கு.

சுவை :- கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு.

குணுநிசயம்

நுட்புழுக் கொல்லி, பூச்சிக்கொல்லி, நச்சரி, கோழை அகற்றி, மூலநோயகற்றி, துவர்ப்பி, வெப்பமுண்டாக்கி.

(தொடரும்)



'ஈயெச்சக் கீரை'

(146-வது மூலிகை)

இதென்ன ஆச்சர்யம்! ஈயெச்சக்கீரையா? இப்படி ஒரு கீரை நம் நாட்டில் உண்டா என்று தனக்குத் தானே கேட்டுக் கொள்ளும் வியப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கத்தான் செய்யும்!

இப்படி ஒரு பெயரை வைத்து நாம் எந்தக் கீரையைப் பழக்கத்தில் அழைக்கிறோம்? தமிழ் நாட்டு மூலிகைகளை நான் தான் படைத்தேன்! அகராதியே எனது வம்ச பரம்பரையில் தான் தோன்றியது என்று இப்பொழுது மார்தட்டிப் பேசிக் கொள்ளுகிறார்களே! அந்த சித்த வைத்தியர்கள் கூட கடைத்தெருவுக்குப் போனால் ஈயெச்சக்கீரை இருக்கா? என்று தைரியமாகக் கேட்கமாட்டார்கள். தென்னாட்டிற்கே உரிய மூலிகை இது என்றால் யாரும் நம்பமாட்டார்கள்.

ஏனென்றால் அந்த அளவுக்கு நமது தமிழ் மொழி பல அந்நிய மொழிக்கலப்பால் அழிந்து போனது தான் காரணம்! மேற்கோள் ஒன்று கூறுகிறேன். ஒருவரைப் பார்த்து நாம் "உங்கள் வயது என்ன? என்றுதான் கேட்கிறோம். வயது என்பது சரியான தமிழ் மொழியல்ல! என்பது தமிழ் அறிஞர்களின் கருத்து.

ஆனுல் அதே அறிஞர்கள் பாமர மக்களிடம் உங்கள் அகவை என்ன ? என்று கேட்டால் அவர்கள் மறுமொழி தர இயலாமல் திரு திரு வென்று விழிப்பார்கள். "அகவை" என்பது சரியான, நல்ல தமிழ் ! ஆமாம். இப்படி நல்ல தமிழ் சொல் வழக்கெல்லாம் அந்நியர்கள் நம் நாட்டின் மேல் படையெடுத்து ஆட்சி கொண்டு அடிமைப் படுத்தியதால் சொல் வழக்கெல்லாம் தலைகீழாக மாறி விட்டது. சபாஷ் ! என்பது தமிழா ? படம் 'போர்' அடிக்கிறதாம். பென்சில், டேபிள், சேர், ஷர்ட், பாண்ட், இப்படியெல்லாம் சொல் வழக்குத் திரும்பிப் போய் நம்மை நாமே கேட்டுக் கொண்டு, வியப்பு அடையும்படியாகி விட்டது ! அல்லவா ?

மருத்துவக் கலையிலும் நம் தமிழ் மொழிக்கு முக்கிய இடத்தைத் தர நமது மருத்துவக் கலைஞர்கள் தவறி விட்டனர்.

குறிப்பாகச் சொல்லப் போனுல் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்திலேயே சித்த மருத்துவப் பேராசிரியர் (1936-ம் ஆண்டிலே) ஒருவர் இந்த ஈயெச்சக் கீரையை ஒரு உருது மொழியிலேயே மூலிகை குணபாடத்தில் குறிப்பிட்டு எழுதியிருக்கிருர். அது தான் புதினு !

ஈயெச்சக் கீரைக்குப் புதினு என்று பெயர். அது உருது மொழி. அந்த காலத்திலேயே தமிழில் எழுதப்பட்ட சித்த மருத்துவ நூலில் ஒரு சித்த மருத்துவர் 'ஈயெச்சக் கீரை' என்று தலைப்பு தராமல் 'புதினு' என்ற பெயர் கொட்டை எழுத்தில் கொடுத்து, அதன் கீழ் சிறிய எழுத்துக்களில் ஈயெச்சக் கீரை என்பதாகக் குறித்துள்ளார். இவருடைய போக்கைப் பின்பற்றியே நானும் அட்டைப் படத்தில் 'புதினு' என்று தலைப்பு போட்டு படத்தைவரைந்து வெளியிட்டேன். ஆனுல் உள்ளே 'ஈயெச்சக் கீரை' என்ற தலைப்பில் ஆரம்பித்தேன். 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன' கதை போல நமது நாட்டின் பண்பாட்டு வழக்கம், மொழி எல்லாம் அந்நியரின் ஆட்சியால் தான் அப்படி ஆயிற்று என்றுல் அதை நாம் அப்படியே விட்டு வைக்கக் கூடாது !

எனவே தான் அட்டைப் படத்தில் புதினு என்று காட்டினேன். காரணம் ஈயெச்சக் கீரை என்றுல் யாருக்குத் தெரியும் ? மருத்துவர் களே மலைத்துப் போவார்களே! அப்படி நம் முன்னேர்கள் எல்லாம் நம்மை பழக்கப்படுத்தி விட்டார்கள்.

அரேபியா, காபூல், பாரசீகம் ஆகிய தேசத்திலிருந்து வந்த ஒரு சொல் புதினு. தமிழ் நாட்டில் வந்து தமிழர் அசைக்க முடியாத அளவுக்கு புகுந்து விட்டது. இனியாவது இந்தப் பெயர் கொண்டு அழைக்காமல் நாம் ஈயெச்சக் கீரை என்று அழைப்போமாக !

இப்படி அழைக்கவில்லை என்றால் நம் குடி ஒன்றும் மூழ்கிப் போகாது. நம் தமிழ் மொழி மூழ்கி விடும். தமிழர் என்பது மூழ்கிப் போகும். தமிழ்நாடு என்ற பெயரே அடிபட்டுப் போய்விடும். பிறகு ஏதோ ஓர் இனம் ; ஏதோ ஓர் மொழி ; ஏதோ ஓர் நாடாகி விடும் என்பதில் ஐயமில்லை. எனவே தான் இந்த ஈயெச்சக் கீரைக்கு நமது பழைய வரலாற்றுப் புகழை வாசகர் நினைவுக்கு கொண்டுவர முயற்சி செய்தேன். இங்ஙனம் நமது நாட்டில் மாற்றுப் பெயராகப் புகுந்த புதினாவுக்கு அகராதிகளில் "புதியன் மூலி" என்றும் பெயரிடப்பட்டு விட்டது. சென்னை நகரத்தில் 'ஆமில்டன் பிரிட்ஜ்' என்ற பெயர் அம்மட்டன் வாராவதி என்று சொல்ல வில்லையா? அது போல புதியன் மூலி என்றும் ஆகிவிட்டது !

"இதென்ன! ஈயெச்சக் கீரையாமே. இதுவரை இப்படி கூப்பிட்டதில்லையே! இந்தக் கீரை மேல் ஈ தன் எச்சத்தை விட்டு வித்தாகி முளைக்கும் கீரையாக இருக்குமோ? ஈ எச்சத்தால் உண்டான கீரையை நாம் ஏன் சாப்பிட வேண்டும்? *சீ...ச்சீ!* இந்த ஈ எச்சக்கீரை பெயரைக் கேட்டாலே காதுகளுக்கு ஓர் அருவருப்பு உண்டாகிறது. இந்தக் கீரையே நமக்கு வேண்டாம் என்று வெறுத்து தள்ளிவிட தீர்மானித்து விடாதீர்கள்.

"அல்லா, அல்லா நீ இல்லாத இடமே இல்லை!" என்று ஒரு திரைப்பட கவிஞர் பாடினார் அல்லவா? அது போலவே இந்த ஈக்கள் இல்லாத இடமே இல்லை! எவ்வளவு தான் துப்புரவாக வைத்து இருந்தாலும், ஏதாவதொரு தின்பண்டம், உணவு வாடை வந்தால் போதும்! மலத்தில் உட்கார்ந்த ஈ உணவுக் கலத்தைத் தேடி வந்து விடும். இப்படி வந்த ஈ நம்மை அறியாமலே உணவில் வந்து உட்கார்ந்து சுவைக்கும் போது அதன் எச்சம் உணவில் இருந்து விட்டாலும் அந்த 'ஈ எச்சத்தில்' உள்ள கிருமிகளை அழித்து விடும் இந்த கீரையைச் சேர்த்த உணவில் என்று பொருள்படத்தான் இந்தக் கீரைக்கு ஈயெச்சக் கீரை என்று பெயரிட்டிருக்கக் கூடும்.

இன்னொரு பொருள்கூட சொல்லலாம். எல்லாக் கீரையிலும் ஈ உட்கார்ந்து எச்சமிடும். இந்தக் கீரையில் எச்சமிடாது! இந்தக் கீரையில் ஈக்குப் பிடிக்காத வாடை ஒன்று வீசும். எனவே ஈ எச்சம் இந்தக் கீரையின் மேல் இடாது என்ற பொருள்பட இதற்கு ஈயெச்சக் கீரை என்றும் பெயரிட்டு இருக்கலாம். எப்படி ஒருசில மூலிகை களுக்கு யானை வணங்கி, பூனை வணங்கி, பேய்மிரட்டி, நரிமிரட்டி, காக்கைக் கொல்லி, நஞ்சுமுறிச்சான் என்றெல்லாம் பெயரிட்டு உள்ளனரோ அப்படி இந்தக் கீரைக்கும் ஈயெச்சக் கீரை என்ற

பெயர் பொருத்தம் சரியே. எனவே வாசக அன்பர்கள் புதினு என்ற சொல் வழக்கை மாற்றி ஈயெச்சக் கீரை என்று சொல்வழக்காக அழைக்க இன்று முதல் வேண்டுகிறேன்.

நம் முன்னேர்கள் எல்லாம் அப்பாவிகள்! அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது 'நான்சென்ஸ்'. அதுவும் வேண்டாம் இதுவும் வேண்டாம். பெரிய படிப்பு படித்து ஆராய்ச்சி செய்து விட்டேன். எனவே இந்தக் கீரைக்கு 'மெந்தால கீரை' (Menthal) என்று பெயர் வைப்பது தான் சரி. ஏனென்ருல் இது 'மாடர்ன் ஓர்ல்ட்' மேனுட்டாருக்கும் நமது மூலிகை பெயர் தெரியவேணும். எனவே மெந்தால் கீரை என்று சொல்வது தான் சரி! என்ருல் அதற்கு மறுப்பு கூறுபவர் யார்? இப்படித் தான் நமது மொழி அழிந்து போனது.

அடுத்து இந்த ஈயெச்சக் கீரையின் குணுதிசயங்களைக் காணலாம். நமது நாட்டில் குழந்தை நோய்களில் மிகுதியாகப் பயன் படுத்தும் ஓமவல்லி, கற்பூரவல்லி, ஆகிய மூலிகைகளுக்கு என்ன தன்மை உள்ளதோ, அது போல் இந்த ஈயெச்சக் கீரைக்கும் ஒரு காட்டமான மணம் இதன் இலையில் இருந்து வீசும். இந்த மணத்தைச் சகிக்காமல் தான் ஈ ஓடிவிடும். இந்த ஈயெச்சக் கீரைக்கு

1) வாந்தியை நிறுத்தும் சக்தியுண்டு.
2) பசியைத் தூண்டும் சக்தியும் உண்டு.
3) சிறுநீரைப் பெருக்கித் தள்ளி உடலுக்கு சூட்டைத் தரும்.
4) அத்துடன் அதிசூட்டைத் தணித்து குளிர்ச்சியைத் தரும் குணமும் இதற்கு உண்டு.
5) அது மட்டுமல்ல! குளிர்ச்சியால் உண்டாகும் இசிவு (இழுப்பு) கை கால் இழுப்பது, சூட்டால் உண்டாகும் நாடி நரம்புத் தளர்ச்சியும் நீக்கி (துவர்ப்பி) உடல் கட்டவும் உதவக் கூடியது இந்த ஈயெச்சக் கீரை!

ஓயாத வாந்தி நிற்க

ஒரு பிடி ஈயெச்சக் கீரை, உளுத்தம் பருப்பு, பழைய புளி அளவுடன் சோத்து சிறிது கறிவேப்பிலையும் சேர்த்து நன்கு வதக்கி (நல்லெண்ணெயில்) அம்மியில் வைத்து அரைத்து துவையலாக்கி வாந்தி வரும் போதெல்லாம் சுண்டை அளவு நாவில் தடவிவிடுங்கள் பிறகு வாந்தி வருகிறதா என்று பாருங்கள்!

குமட்டல் நீங்க

சிலருக்கு குமட்டல் வரும். அதாவது இதை ஒக்காளம் என்பார்கள். வாந்தி வராது, ஆனால் ஓங்கார ஓசையுடன் குமட்டல் எழுப்புவார்கள். இத்தகைய குமட்டல்களை நிறுத்த இந்த ஈயெச்சக் கீரையை 1 கைப்பிடி எடுக்க வேண்டியது. அத்துடன் 1 துண்டு இஞ்சி, 6 மிளகு எடுத்து தட்டி ஒரு மண் சட்டியில் போட்டு 2 குவளை நீர் விட்டு காய்ச்ச வேண்டியது. 1 குவளையான பின்பு வடிகட்டி எடுத்துக் கொண்டு அதில் பனைவெல்லம் 50 கிராம் போட்டு கலந்து வைத்துக் கொண்டு, அரை மணிக்கொரு தடவை ஒரு முடக்கு வீதம் கொடுத்துவர, குமட்டல் இருந்த இடம் தெரியாமல் போகும்.

அசீரணம் நீங்கி நல்ல செரிப்புண்டாக

இந்த ஈயெச்சக் கீரையைச் சமையலில் சேர்ப்பவர்களுக்கு நாளடைவில் அசீரணம் என்பது இருந்தஇடம் தெரியாமல் போகும். அவ்வளவு பசி எடுக்கும். குறிப்பாக மாமிச பட்சணிகளாக இருக்கும் மனிதர்கள் எல்லாம் செரிப்பு உண்டாக இந்த ஈயெச்சக் கீரையின் தயவைத்தான் நாடவேண்டும்! காபூல், அரேபியா போன்ற அரபு நாடுகளில் மாமிச உணவுகள் தான்! எனவேதான் இந்த ஈயெச்சக் கீரையைக் கண்டுபிடித்து "புதினா" என்றார்கள். இவர்கள் கண்டு பிடிப்பதற்கு முந்தியே தமிழகத்தில் இதற்கு பெயர் 'ஈயெச்சக் கீரை' இதற்கு புதினா என்று பெயர் வந்தது எப்போது? என்று கேட்கிறீர்களா? அதுதான் - முகமது கஜினி, முகமது கோரி வடநாட்டில் படையெடுத்து வந்தபின்பு நம் நாட்டிலும் (தமிழகத்தில்) ஆற்காட்டு நவாப்பு! மைசூர் ஹைதர் அலி! திப்பு சுல்தான்! ஆகியோர் காலத்துக்கு பின்புதான். முகமதியர் அரசர்களாக இருந்தபோது இவர்கள் உணவுக்கு பொருத்தமான இந்த ஈயெச்சக் கீரையை அவர்கள் சமையல்காரர்கள் மூலம் புதினா என்ற பெயர் மருவி விட்டிருக்கலாம். இப்பொழுதும் வடாற்காடு மாவட்டத்திலே ஆற்காடு, விஷாரம், வாணியம்பாடி, வேலூர் பகுதிகளில் முதலாளியை 'யஜமான்' என்பார்கள். ஈயெச்சக் கீரையை புதீனா, பொதினா என்பார்கள். அது மட்டுமல்ல, இந்தப் பகுதியில் உள்ள பெரிய அரசியல்வாதிகள் கூட ஒரு முஸ்லிம் தனவந்தரைக் கண்டால் சலாம் எஜமான் என்பார்கள். இதை ஏன் வலியுறுத்திக் கூறுகிறேன் என்றால், முகலாய சாம்ராஜ்யத்தில் மாறிவிட்ட மொழிகள் இன்றளவும் நம்மொழியாக திரும்பவில்லை!

விக்கல் நீங்க

சிலருக்கு விக்கல் வரும். அது யாது காரணத்தால் வந்த போதிலும் அந்த விக்கல் உடனே நிற்க ஓர் முறை :- ஈயெச்சக்கீரை

யை வேருடன் உலர்த்தி இடித்து, அதே அளவு அரிசி திப்பிலியை உலர்த்தி இடித்து பொடித்த தூள் சமனுகச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டியது. இதை 1 அரிசி எடை முதல் 5 அரிசி எடை வரையில் நிறைய அசல் தேன் விட்டுக் குழைத்து நக்கிவிட நிற்காத விக்கல் எல்லாம் நின்றுபோகும். ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவு செய்தும் ஆங்கிலமருத்துவமுறையில் நிற்காத விக்கல் இம்முறையால் நின்று போய்விட்டது எனது அனுபவ முறையில் ஒன்று.

எல்லாவிதக் காய்ச்சல்களும் (சுரங்களும்) நீங்க

ஈயெச்சக் கீரை, கற்பூரப்புல் (அ) சாதாரணமான அருகம்புல் வகைக்கு ஒரு பிடி எடுத்து அத்துடன் சுக்கு, மிளகு, சீரகமும் அளவு டன் சேர்த்து தட்டிப் போட்டு 2 குவளை நீர் விட்டு மண் சட்டியில் கஷாயமிட்டு 1 குவளையாக்கி வேளைக்கு 1 முடக்கு வீதம் குடித்துவர எந்தவித காய்ச்சலும் உடலைவிட்டு ஓடிப்போகும். 'குரோமைசின்' சாப்பிட காய்ச்சல் விட்டுப் போகும். ஆனுல் இன்னெரு இனம் தெரியாத நோய் தோன்றிவிடும். ஆனுல் ஈயெச்சக் கீரைக்கு இப்படி ஒரு கெடுதல் உண்டாக்கும் குணமில்லை! அதனுல் தான் சுல்தான் கள் ஹுக்கா பிடித்து, மாமிச உணவுகளை ருசித்து, அந்தப்புரத்தில் அளவளாவி ஆனந்தக் கூத்து நடத்தி 'வரலாற்றில் இடம் பிடித்து விட்டார்கள்'. எனவே எந்தவிதக் காய்ச்சல் வரும்போதும் (சீதள ஜுரமா) அல்லது (உஷ்ணத்தால் வந்த ஜுரம்) அல்லது (கபஜுரம்) எது வரினும் ஈயெச்சக் கீரையை குடிநீர் காய்ச்சி குடிக்க அவை விலகி விடும்.

சூதகத்தடை (எ) மாதருது தாமதப்படும்போது

ஈயெச்சக் கீரையை உலர்த்தி வேண்டிய மட்டும் இடித்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு தினம் ஒன்றுக்கு 3 வேளை தேனில் உட்கொள்ள மாதவிடாய் தாமதம் ஆவது நின்று உடன் மாதருது தோன்றும். தோன்றியவுடன் நிறுத்த, சரிவர போய் தானுகவே நிற்கும். இதே போல பல் தொந்தரவுகளுக்கும் இந்தப் பொடியை பற்களில் தேய்த்து வருவதால் பல் தொல்லைகள் நீங்கும்.

பொதுவாக எல்லா வித நோய்களுக்கும் ஓர் அருமையான சமையல் பக்குவம்

ஈயெச்சக் கீரை ஒரு கைப்பிடி, பிரண்டை துண்டு செய்தது 50 கிராம், பழைய புளி 100 கிராம், ஒரு துண்டு இஞ்சி, மிளகு 10, சீரகம் 2 சிட்டிகை, பூண்டு 2 திரி, கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை

அளவுடன், ஒரு கையளவு உளுத்தம் பருப்பு இவைகளைச் சேர்த்து மண்சட்டியில் பொன்வறுவலாக வதக்கி, அளவுடன் உப்பு சேர்த்து அப்படியே அம்மியில் வைத்து அரைத்து மைபோல் துவையலாக்கி வைத்துக் கொண்டு தினமும் முதல் சோற்றில் எலுமிச்சம் காயளவு போட்டு அத்துடன் சிறிது நெய்விட்டு பிசைந்து மூன்று உருண்டை உருட்டி வாயில் போட்டு மென்று தின்று; பின்பு உங்களுக்குப் பிடித்தமான காய்கறிகளை உண்ணுங்கள். 40 நாள் இப்படி செய்த பின்பு உங்கள் வயிற்றினுள் நடந்த போராட்டங்கள் எல்லாம் படிப் படியாகக் குறையும். அத்துடன் சர்ம நோய்களும் நீங்கும். இனந் தெரியாத நோய்கள் எல்லாம் உடம்பை விட்டு அடியோடு ஒழிந்துப் போய்விடும் என்பதில் ஐயமே இல்லை! இப்படி செய்து குணப்பட்ட வர்கள் பிறர்க்கு உபகாரமாக இந்த ஈயெச்சக் கீரையை உபதேசித்து அகத்தியர் போல நீங்களும் ஒரு குருவாகி விடலாம்.

ஆங்கில மருத்துவ முறையில் இந்த ஈயெச்சக் கீரையிலிருந்து ஒருவித உப்பு எடுப்பார்கள். இதனை நாமும் செய்யலாம்! பிரண்டை யிலிருந்து உப்பு எடுக்கச் சொல்லித் தரவில்லையா? அத் தன்மை போல், ஆனால் அத்தகையஉப்பும் எண்ணெயும்எடுப்பது சுலபமான முறையல்ல. வெகு பிரயாசைப்பட்டு சிறிதளவு சேர்ப்பதும் கடின மானது தான்! இந்த ஈயெச்சக் கீரையிலிருந்து மேனாட்டு முறைபடி பெப்பர்மின்ட் (peppermint)என்ற எண்ணெயும், மெந்தால் (menthal) என்ற உப்பும் எடுப்பார்கள். இதைக் கொண்டு (fever mixture) காய்ச்சலுக்கு மருந்து கலக்கி கொடுப்பது நவீன மருத்துவ முறையில் வழக்கமாகும். ஆனால் ஈயெச்சக் கீரையை உணவாக்கிக் கொண்ட பெருமை முதலில் நம் தமிழ் நாட்டைத்தான் சாரும் என்பதில் சந்தேகமே இல்லை!

நேத்திரப் பூண்டு தைலம்!

நேத்திரப் பூண்டு என்ற மூலிகை தைலம், எல்லாவித கண் கோளாறுகளுக்கும் கைகண்ட பரம்பரை அனுபவ முறை. இதை ஆசிரியர் கண்ணப்பர் அவர்கள் முறையாக எடுத்து தைலமாகச் செய்து அண்மையில் வாசக சந்தா அன்பர்கட்கு மட்டும் கொடுக்க முன்வந்துள்ளார்.

நேத்திரப் பூண்டு தைலம் வேண்டுவோர் தபால் செலவு ரூ. 2-50ம், தைலவிலை ரூ. 7-50ம் ஆக ரூ. 10—00 மணியார்டர் அனுப்பி பெறலாம். பணம் அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடல் வேண்டும்.

சந்தாதாரர் அல்லாதார் ரூ. 16-00 M. O. செய்ய வேண்டும்.

ஆசிரியர் அறிக்கை!

சில காலமாக மூலிகைகள் நம்மைவிட்டு ஒதுங்கிப் போகிறதை நான் உணர்ந்து வருகிறேன். ஆண்டுக்கு ஆண்டு மூலிகைகள் அருகி கருகி வருவதன் காரணத்தை அண்மையில் எனது அனுபவ பூர்வமாகவும், மற்றவர்கள் கூறும் கருத்தையும் கொண்டு ஆய்வு செய்ததில் உண்மையை உணர முடிந்தது.

அதாவது தற்போது முள்வேலிக்காக வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த வேலிக்காத்தான் முட்செடி எங்குப் பார்த்தாலும் பிசாசு போல் வளர்ந்து விட்டிருக்கிறது. இந்த வேலிக்காத்தான் என்ற சீமை வேலிமுள் செடிகள் வளராத இடமே இல்லை என்றும் கூறலாம். இதனால் ஒருவித நற்பயனும் இருப்பதாகத் தெரியவில்லை.

வேலிக் காப்பதற்காகக் கொண்டு வந்த இந்த செடி (அந்நிய நாட்டான் நம்மைச் சுரண்டி அடிமைப் படுத்தியது போல்) நமது நாட்டின் உயிருக்குச் சமமான பல செடி கொடிகளை வளரவிடுவ தில்லை! இந்த முள்வேலிச் செடிகள் படும் நிழல்களில் கூட, மற்ற புல்பூண்டுகளை இந்த நிழல் வளர விடுவதில்லை. அதுமட்டுமல்ல, இந்த முள்வேலிக்குப் பக்கத்தில் வளரும் நெற்பயிர்கள் கூட கதிர் விடாமல் அழிந்து விடுவதாகப் பல விவசாயிகள் கூறினார்கள். இனியும் நாம் இந்தச் செடியை வளரவிட்டால் அடுத்த சில ஆண்டு களில் அற்புத மூலிகை இனங்களை எல்லாம் அழித்துவிடும் என்பதில் ஐயமே இல்லை. எனவே இதை கண்ணுற்ற அன்பர்கள் அனைவரும் நம் நாட்டு மூலிகைகளைக் காப்பது நமது கடமை! என உணர்ந்து, இந்த செடி எங்கெல்லாம் உள்ளதோ; அந்த நிலத்துக்காரர்கட்கும் சொல்லி வேருடன் களைந்து வெட்டிப் போடுவது தலையாய கடமை யாகும்.

அரசாங்கம் செய்யட்டுமே என்று காத்திருக்க வேண்டாம்! அரசின் உத்தரவுக்கு மக்கள்சபை, மந்திரிசபை விவாதித்த பின்னர், அது உத்தரவாகி வருவதற்குள் இந்த வேலிமுள் செடி, இருக்கும் நமது நாட்டின் நல்ல பல மூலிகைகளை எல்லாம் அழித்து விட்டு அந்த இடங்களைஎல்லாம் பிடித்துக்கொண்டு வளர ஆரம்பித்துவிடும்.

இதன் முள் பட்டால் கூட அந்த இடம் பொறுக்க முடியாத வலியும், ரணம் ஆறுமலும் வேதனை தருகிறது. "குடும்பக் கட்டுப் பாட்டுக்கு ஆள்தேடி அலைவதை விட — இந்த சீமை வேலிமுள்செடி வளர்வதை அடியோடு மட்டம் செய்தால் தான்" மக்கள் நலமுடன் வாழ, மற்ற மரம் செடி கொடிகள் வாழ வகை உண்டாகும். எனவே இந்தச் செய்தியை கவனித்து வைத்து நேரம் காலம் பார்க்காமல் முள்வேலிச் செடியை ஒழித்துக் கட்டுங்கள்!

குறிப்பு :—வேலிக்காக நாகதாளி சப்பாத்தியைப் பயிரிட்டால் அதன் பேரில் பலவித செடி கொடிகளும் வளரும்.

★ அறவுரை!

திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

* மக்களுக்கிருக்கும் போதாக் குறையைத் தீர்ப்பதே மந்திரிகளின் கடமை. மாலையும், வரவேற்புப் பத்திரமும் வாங்குவதல்ல.

* நம்நாட்டில் விளையும் பொருள்கள் வெளிநாடு சென்று உருவம் மாறி வந்தால் அதற்கு மதிப்புக் கொடுப்பது ஞாயமா?

* தேசத்திற்காகச் சிறைச்சாலைக்குப் போனல் யாவரும் புகழ்வர். திருடிவிட்டுப் போனல் யார் புகழ்வார்? மகாத்மா இறந்தவுடன் அதைக் கேட்டு பத்துபேர் உயிர் விட்டார்கள். அதிலிருந்து அவருடைய பெருமை தெரியவில்லையா?

* வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உண்டாக்கப் பொருளா தார அடிப்படையில் இயங்காமல் எந்தத் திட்டத்தை எத்தனை ஆண்டுகள் ஏட்டளவில் படித்தும் பயனில்லை.

* கம்யூனிசம் மனிதனுக்கு மட்டும் பொருளைப் பங்குபோடச் சொல்கிறது. திருவள்ளுவரும், வள்ளலாரும் அப்படியல்ல. எல்லா உயிர்களையும் காப்பாற்றச் சொல்லுகிருர்கள்.

* சந்நியாசியும், பிரம்மசாரியும் தான் சுயநலமில்லாமல் அரசாங்கத்தை நடத்த முடியும். மற்றவர் பதவிக்கு வந்தால், பதவியில் தன் ஆட்களைக் கொண்டு நுழைப்பதும், பிளாக் மார்க்கட்டும், சுயநலமும்தான் தாண்டவமாடும்.

* தெய்வத் திருவள்ளுவர் ஈராயிரம் யாண்டுகட்கு முன் யாத்த திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள். ஒழுக்கநெறியிலும் மற்ற அறநெறியிலும் அவருக்கு ஈடு, இணை ஒருவரும் இல்லை என ஐந்து கண்டங் களும் ஒப்புக்கொண்ட ஒரே தலைவர் அவர். இனி அப்படி ஒரு மகானைப் பெற ஈராயிரம் யாண்டு பாரத அன்னை தவமிருக்க வேண்டும். மற்ற அரசியல் தலைவர்களை அவரோடு ஒப்புநோக்க ஒருவரும் இல்லை. பாரத இந்தியாவில் தன் புதல்வர் ஒருவரை யும் உத்யோகத்திலோ, வாணிபத்திலோ அமர்த்தவில்லை இது ஒன்று போதுமே அவருடைய புனித பற்றற்ற தன்மையை உணர.

உ

முருகா.

சித்தர்கள் பற்றிய ஆய்வுத் தொடர் கட்டுரை:

நம் நாட்டுச் சித்தர்கள்!

[இரா மாணிக்கவாசகன், எம். ஏ. எம். லிட்.]

— முன் மாதத் தொடர்ச்சி

அனந்தகுண பாண்டியன் என்கிற மூன்றும் நிலந்தரு திருவில் பாண்டியன் காலத்து புரோகித அகத்தியர் 2	தமிழர்	6000 BC
பாரத காலத்து குஞ்சரகிரி அகத்தியர்	ஆரியர்	3110 BC
துவாராபதி அகத்தியர்	,,	3100
யசோமதி அகத்தியர்	,,	2000
திருப்பரங்குன்றத்துத் தமிழ்ச்சங்க காலத்து புரோகித அகத்தியர் 3	,,	1900
காரைத்தீவு அகத்தியர்	பௌத்தர்	400
போதலகிரி அகத்தியர்	,,	274
திலோத்தனம் அகத்தியர்	,,	100
பாவநாச அகத்தியர் 1	தமிழர்	2 AD
பாவநாச அகத்தியர் 2	,,	2
கூர்ச்சர நாட்டு புரோகித அகத்தியர் 4	ஆரியர்	6
குஞ்சரகிரி அகத்தியர் 3	,,	7
பாண்டியரின் புரோகித அகத்தியர் 5	தமிழர்	7
சித்தர் அகத்தியர்	,,	10
தேவாரத் திரட்டை இயற்றிய அகத்தியர்	,,	11
அகத்தியர் பக்த விலாசம் என்ற நூல் எழுதிய அகத்தியர்	ஆரியர்	13
குற்றாலத்திலுள்ள திருமலைச் சிவபெருமானுக்கிய அகத்தியர்	தமிழர்	13
அகத்திய பட்டர்	ஆரியர்	18
பள்ள அகத்தியர்	தமிழர்	19

இதுவே சாமி. சிதம்பரனுர் தரும் நீண்ட பட்டியல். எந்த எந்த ஆதாரங்களைக் கொண்டு இத்தனை அகத்தியரையும் காலமுறைப்படுத்தினுர் என்பதை அவர் நூலில் காணமுடியவில்லை. வரலாற்றுச் சான்றுகளுடனுவது, இலக்கியச் சான்றுடனுவது நிறுவக்காணவில்லை. இதனை பின்னர் ஆராயலாம்.

ஓர் உண்மை புலனுகின்றது. அகத்தியர் என்ற பெயரில் ஒன்றுக்கு மேற்பட்டவர் இருந்திருத்தல் வேண்டும் என்பது. ஒன்றுக்கு மேல் எத்தனை அகத்தியர் வாழ்ந்தனர் என்பதே ஆராய்ச்சிக்குரியது.

அகத்தியரைப் பற்றி அரிய பல கருத்துக்களை நமக்கு வழங்கும் வரலாற்றுச் சான்றுகளில் இலக்கியங்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. எனவே இலக்கியங்களில் அகத்தியரைப் பற்றி வரும் குறிப்புகளைத் தொகுத்துக் காண்பது நம் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யும்.

கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகத் தொன்மையானது எனக் கருதப்படுவது தொல்காப்பியம். இந் நூலின் சிறப்புப் பாயிரத்தில்

முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்

— (7-8 சிறப்புப் பாயிரம் எழுத்து)

என வரும் அடிக்கு உரையெழுதும் நச்சினுர்க்கினியர், முந்து நூல் என்பது அகத்தியர் எழுதிய அகத்தியம் என்னும் நூல் எனக் குறிக்கின்றுர். அத்துடன் தம் கருத்துக்குத் துணையாகப் பன்னிரு படலப் பாயிரப் பாடலையும் மேற்கோள் காட்டுகின்றுர்.

ஆனுப் பெருமை அகத்திய னென்னு
மருந்தவ முனிவ னுக்கிய முதனூல்
பொருந்தக் கற்றும் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்

— (முகவுரை பக் 10—தொல் எழுத்து
நச்சினுர்-கழகம் 1966)

அகத்தியர் 12000 நூற்பாக்கள் அடங்கிய அகத்தியம் என்ற விரிவானநூல் இயற்றினுர் என்றும், அதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு,சந்தம்,வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடம், கந்தருவம், கூத்து, என்பனவும் பிறவும் இடம் பெற்றுஉள்ளன எனவும் கூறுவர். — (பக் 29, தமிழ் இலக்கிய வரலாறு
எம். ஆர். அடைக்கலசாமி 1969)

ஆனல் பேராசிரியர், டாக்டர். வித்தியானந்தன் அவர்கள் தம் "தமிழர் சால்பு" என்னும் நூலுள் அகத்தியர் சூத்திரங்களில் சிலவற்றையே உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியிருக்கின்றனர். இவற்றையெல்லாம் பவானந்தம் பிள்ளை தொகுத்து "பேரகத்தியத் திரட்டு" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். அவற்றின் மொழி, நடை, பொருள் இவற்றைக் கொண்டு ஆராயின் சங்க காலத்துக்குப் பிற்பட்டதெனக் கொள்ளலாம் எனக் குறித்துள்ளார்.

(பக் 19, தமிழர் சால்பு—டாக்டர். வித்தியானந்தன்
பாரி புத்தக நிலையம் 1971)

சிறப்புப் பாயிரம் குறிக்கும் முந்துநூல் என்பது அகத்தியர் எழுதிய இந் நூலையே குறிக்கும் என்னுமிக் கருத்து சற்று சிந்திக்கத் தக்கதாகவே உள்ளது. இக் கூற்று உண்மையாக இருக்குமாயின் குருகுலவாசியாக வாழ்ந்த, குருபக்தி மிக்க தொல்காப்பியர் தம் நூலுள் எங்கேனும் ஓர் இடத்திலாவது குறித்திருத்தல் வேண்டும். 'என்ப', 'மொழிப' என வரும் இடங்களைக் கொண்டு அவை அகத்தியரைக் குறிக்கும் என்பதும் பொருந்தாததாகும் எனத் தோன்றுகிறது.

'நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே'

— நூற்பா 7 எழுத்து

'உளவென மொழிப உணர்ந்திசினேரே'

— நூற்பா 116 சொல்

'இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'

— நூற்பா 4 பொருள்

'என்மனர் புலவர்'
'யாப்பென மொழிப யாப்பறிபுலவர்'
'தோலென மொழிப தொன்னெறிப்புலவர்'

— (பக் 41 தமிழ் இலக்கிய வரலாறு
மது ச. விமலானந்தம்,
C. நாகைய செட்டி கோ 1967)

என வரும் அடிகளைக் கூர்ந்து ஆராயின் தொல்காப்பியர் குறிப்பது அகத்தியரை அன்று அல்லது அகத்தியர் மட்டுமன்று. தமக்கு முன் வாழ்ந்த அறிஞரையே என்பது விளங்கும். ஏறக் குறைய 287 இடங்களில் இவை போலும் தொடர்களைத் தொல்காப்பியர் பயன் படுத்தியுள்ளார் என்பது இங்குக் குறிக்கத் தக்கது. அகத்தியர் பெயரோ அன்றி அவர் வாழ்ந்த இடமோ (இடவாகு பெயராக) குறிக்கப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

அகத்தியரைத் தொல்காப்பியரின் ஆசிரியர் எனக் கூறும் முதல் உரையாசிரியராக நச்சினூர்க்கினியர் திகழ்கின்ருர். அவர்தம் உரையில் குறிக்கும் கதையாவது :—

'அகத்தியர் அதங்கோட்டாசிரியரை நோக்கி, "நீ தொல் காப்பியன் செய்த நூலைக் கோற்க" என்று கூறுதலானும், தொல் காப்பியனுரும் பல்காலும் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும் என்று கூறுதலானும் இவ்விருவரும் வெகுளாமல் இந் நூற்குக் குற்றங் கூறிவிடுவனெக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல் லாம் விடை கூறுதலின் 'அரில்தபத் தெரிந்து' என்ருன்.

அவர் கேளண்மி னென்றற்குக் காரணம் என்னை எனில் தேவரெல்லாம் கூடியாஞ் சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென் றிசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனுரே ஆண்டிருத்தற்குரிய ரென்று அவரை வேண்டிக்கொள்ள ; அவருந் தென்றிசை கட்போது கின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனுர் திரணதூமாக் கினியாரை வாங்கிக் கொண்டு புலத்தியனுருழைச் சென்று அவருடன் பிறந்த குமாரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீ இப்பெயர்ந்து துவாவிபுதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண் கோடி வேளிருள்ளிட்டரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின் கணிருந்து இராவணனைக் காந்தருவத்தால் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனுரை நோக்கி 'நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக' எனக்கூற, அவரும் 'எம்பெருமானுட்டியாரை எங்ஙனம் கொண்டு வருக' என்ருர்க்கு 'முன்னுகப் பின்னுக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டுவருக' என, அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி வையை நீர்கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டு போகத் தொல்காப்பியனுரும் கட்டளை இறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட அது பற்றியேறினர் ; அது குற்றமென்று அகத்தியனுர் குமரியாரையுந் தொல்காப்பியனுரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார். 'யாங்கள் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையின் எம்பெருமானுஞ் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனுரைச் சபித்தார். அதனுல் அவர் வேண்டாராதலின் அவன்செய்த நூலைக் கோற்க என்ருறென்க.' (பக் 11 நச்சினுர் உரை தொல் எழுத்து)

இங்ஙனம் ஆசிரியர் மாணவர் கருத்து வேறுபாட்டை முதலில் குறிக்கும் இவ்வுரையாசிரியராகிய நச்சினுர்க்கினியர் காலம் கி. பி. பதினுன்காம் நூற்ருண்டு ஆகும். (பக் 187 தமிழ் இலக்கிய வரலாறு மு. சு. அருள்சாமி, பாரி நிலையம் 1969)

தொல்காப்பியர் அகத்தியரின் மாணுக்கர் என்பது மாத்திரம் பல்காப்பியர் உரை, சிகண்டியார் உரை முதலியவற்ருல் தெரிகிறது. மேற்காட்டிய பன்னிரு படல வரிகளோடு புறப்பொருள் வெண்பா மாலே, அகப்பொருள் விளக்கம் முதலிய இலக்கண நூல்களின் அடிகளும் அக் கருத்துக்களே செய்யும் வகையில் அமைந்துள்ளன.

மன்னிய சிறப்பின் வாஞேர் வேண்டத்
தென்மலே இருந்த சீர்சால் முனிவன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் வியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் – (சிறப்புப்பாயிரம் புறப்பொருள் வெண்பா மாலே, கழகம் 1969)

பூமலி நாவன் மாமலேச் சென்னி
ஈண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிசைதீர்த்
தலேகட லடக்கி மலயத் திருந்த
அருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலேவ ஞகிய
தொல்காப்பியன் – பாயிரம் அகப்பொருள் விளக்கம்

மேற்கண்ட அடிகளில் இருந்து அகத்தியருக்குப் பன்னிரு மாணவர் என்பதும், அவருள் தொல்காப்பியர் தலேவராய் இருந்தார் என்பதும் விளங்குகின்றது. புறப்பொருள் வெண்பாமாலே ஆசிரியர் காலம் கி. பி. ஏழாம் நூற்ருண்டு. அகப்பொருள் விளக்கம் ஆசிரியர் நாற்கவிராச நம்பியின் காலம் கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டு. உரையாசிரியர் நச்சினுர்க்கினியர் காலம் கி. பி. பதினுன்காம் நூற்ருண்டு என முன்னரே கண்டோம். எனவே இவருள் காலத்தால் முந்திய புறப்பொருள் வெண்பாமாலே குறிக்கும் கருத்து அவருக்கு முந்திய காலத்தில் வாழ்ந்த புலவர் எவரும் குறிக்கவில்லே என்பது அறியத் தக்கது.

தொல்காப்பியத்தை அடுத்துப் பழமையானவை என்று கருதப் படுவன 'பாட்டும் தொகையுமாம்.' இவை சங்க இலக்கியம் என்று குறிக்கப்படும். எட்டுத் தொகையில் சுமார் 716 புலவர்களால் பாடப்பட்ட 2352 பாக்கள் உள்ளன. பத்துப் பாட்டில் 10 புலவர்களால் பாடப்பட்ட 3552 அடிகள் உள்ளன. இவற்றில் அகத்தியர் என்ற பெயரோ, அகத்தியம் என்ற பெயரோ குறிக்கப்படவில்லே என்பது ஈண்டுக் குறிக்கத் தக்கது. (தொடரும்)

கோவைக் கருத்தரங்கு சொற்பொழிவுத் தொடர் கட்டுரை :

புற்று நோய்!
(CANCER)

[டாக்டர் எம். சண்முகவேலு, கோவை]

— முன் மாதத் தொடர்ச்சி

பரிகார முறைகள்

புற்றுநோயில் முக்குற்றங்களும் வாயுக்களும் கேடடைந்து இருப்பதால் அவற்றைத் தன்னிலை படுத்த சித்த உயர்தர மருந்துகளை கையாள வேண்டும். புற்று போன்ற கொடிய நோய்க்கு "இரசம் போன்ற மருந்தே பிரதானம்." **(Mercury is considered among Siddhas as an universal remedy for all diseases).** அதனைச் சரியான முறையில் தயாரிப்பதென்றால், "சித்த வயித்திய முப்பு" வைப்பற்றி நன்கு தெரிந்திருக்கவேண்டும். முப்புவின் உதவியின்றி மருந்துகள் தயாரிப்பின், தக்க பலனளிக்காது.

(மேற்கோள்)

"உப்பினைப் பிடித்தால்-
சூதமும் புரைகழன்றுடும்"

"வண்ணனைக்கூட்டாமல் மருந்துமே செய்தால்
வாதிமகனல்ல வல்லமாடுதானே" என்பதினாலும்

"முப்புதொட்டுக்கற்ப முண்டறியாதார்க்கு
எப்போதுங்காலனெமன்" என்பதினாலும்

"சொர்னமது முப்பூவால் கைக்குள்ளாச்சு
சோராமல் செய்பவர்க்குச் சித்தியாமே"
— என்பதினாலும்

"பதிவான முப்பூவையறிய வென்றால்
பேரப்பா சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
பெருமையுள்ள பிறப் பிறப்பகற்றுமூலி"
— என்பதினாலும்

"காடிதனில் கல்லுப்பதின்சுண்ணமும்
போடுங்குன்றிப் பொசித்தவர் மாழ்வரோ"
— என்பதினாலும்

"உப்பின் கசடதுபோய் ஊறலதுமாறினதால்
முப்புச்சுண்ணமாவதற்கு மூன்றுபேர் உப்பதனுல்
கற்பாந்தரங் கோடிகாயமது வலுத்துச்
செற்பாயும்வாசியினுல் தேகம்" —என்பதினுலும்

"சீனச்சரக்கறுபத்தினுலுஞ் சுண்ணம்
செந்தூரபற்பமுஞ் செயநீர்திராவகம்
பாணத்தினுர்க்குடோரி கட்டுங்களங்கதும்
பார்க்கப் பார்க்கச்சரக்க தீ தங்களும் நீறே"
— என்பதினுலும் அறிகிறோம்.

முப்பூவைப் பற்றிய சிறந்த குணங்களைக் கூறினோம். சித்த உயர்தர மருந்துகளை விரைவிலும், சிறந்த குணமுள்ளதாகவும் செய்து முடிக்க சித்த வயித்தியர்களாகிய நாம் முப்புவைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து செய்து முடித்துக் கைவசம் வைத்துக் கொள்ளவேண்டும். சித்த நூல்களில் ரசத்தை **(Mercury)** முதற் சரக்காகக் கருதியுள்ளார். அதனைத் தயாரிப்பதற்கு முப்புவின் உதவி இன்றியமையாதது. பொதுவாக எல்லா வகை ரச உப ரசங்களையும் பற்பச் செந்தூரங்களாக்க முப்புவின் சேர்க்கை மிகவும் முக்கியமானது. ஆனுல் முப்புவைத் தயாரிக்க எல்லாராலும் இயலாது. பல நூல்களை ஆராய்ந்தறிந்து அனுபவமுள்ள பண்டிதர்களை அணுகித் தெறிந்துகொள்ள வேண்டும்.

(மேற்கோள்)

"பிண்டமென்ற சவர்க்காரவித்தை தன்னைப்
பேருலகிலாரறியப் போறுரப்பா
கண்டவர்கள் கோடியிலே யொருவருண்டு
கைமுறையாயவர் காட்டிற்குருவுந் தோன்றும்

பண்பாக நின்ற பூரணத்தைக் கண்டாற்
பாலகனே முப்புவும் நன்ருய்த்தோன்றும்
விண்டதில்லை கண்டவர்கள் சொல்லார் சொல்லார்
வீணுகச்சுட்டலைந்து விதி என்பாரே"

என்பதினுல் இதனைக் கற்றுக்கொள்ளுவதிலுள்ள சிரம சாத்தியத்தை உணர்கிறோம்.

இரச மருந்துகளைப் போலவே தாம்பிரம், துருசு, வங்கம், திருவங்கம், நாகம், தங்கம், வெள்ளி, முத்து, பவளம், அயம், காந்தம், உருக்கு, வெள்ளைப் பாடாணம், கொடிவேலி, சேராங்கொட்டை

இவை போன்றவை புற்றுநோய்க்குப் பரிகாரங்களாகும். இவற்றை சரியான முறையில் தயாரித்து உள்ளும் புறமும் வழங்கும்போது புற்றுநோயின் கொடூரம் அடங்கி நீர், சீழ், ரத்தம் இவை கசிவது நின்று புண்ணும் சருகுபோல் உலர்ந்துபோம். நோயாளியின் மற்ற குறிகுணங்களும் நாளுக்கு நாள் குறைந்து உடல் தேறிவரும்; உள்ளம் தைரியம், நிம்மதியும் அடையும். மேற்கூறிய மருந்துகள் யாவும் கேடடைந்த முக்குற்றங்களையும், வாயுக்களையும் சமனப் படுத்தி உடல் நிலையை நன்னிலைமையாக்கும். உடலிலுள்ள எந்த வித பிணியும் மேற்கொள்ளாது அடங்கிவிடும். இதுவே சித்த மருத்துவத்தின் சிறப்பும் பெருமையுமாகும். ஆனால், நவீன முறை யில் எக்ஸ்ரே, கோபால்டு, ரேடியம், அறுவை முதலிய சிகிச்சைப் **(X-ray, Cobalt, Radium amd Surgical treatments)** புற்றுநோய்கள் பூரண குணம் கிடைப்பது இல்லை என்றே சொல்லலாம். அப்பேர்பட்ட நோயினருக்கு புற்றுநோயுள்ள இடமும் அதன் அருகாமையிலுள்ள நல்ல பாகங்களும் **(Diseased Part as well as the adjoining healthy tissues)** சேதமாகி நோயினர் சக்தியிழந்து வாய்மூலம் மருந்துகள் உணவாதிகள் ஏற்றுக்கொள்ள வழியிலாது தவிக்க நேரிடுகிறது. ஆதலால், நோயின் ஆரம்ப நிலையில் நவீன சிகிச்சைக்குப் போகும் முன்னரே சித்த மருத்துவப் பரிகாரம் கிட்டுமானால் நன்மை பயக்கு மென்பது என் கருத்து.

"Siddha high class of medicines become very valuable in effect by their beneficial therapeutic action of controlling the spread of growths by converting the vitiated doshas or constitutional tumours duly corrected and thereby making the soil factor quite healthy for the patient and unsuitable for the organisms, virus or vishams or visha neer whatever it may be that is responsible for the growth to thrive in the system any longer. We tackle not only the virus but also the general constitutional disorders simultaneously. This is the beauty our Siddha Medicines as compared with the modern treatments of X-ray, Radium, Cobalt and surgical methods. By this method is likely that the virus may affect any other part of the body remaining latent in it. However Cancer cases must be wise enough to resort to Medical Aid in the early stage before much damage is caused both locally and constitutionally. Advanced cases of cancer become unfit for any kind of treatment."

சித்த ஆராய்ச்சி நிலையத்தில் ஏராளமாகப் புற்று நோய்கள் சிகிச்சைக்கு வந்தன. அவைகளில் கையாண்ட சில ஆராய்ச்சி அனுபவ முறைகளைக் கீழே காணலாம்.

1. புற்று குட்டம் நிவாரணி :— காளமேக நாராயணச் செந்தூரம், ரச செந்தூரம் நெ. 2. மிருதார்சிங்கி பற்பம், நாகசங்கு பற்பம், பவளச் சுண்ணம் நெ. 2. சிருங்கி பற்பம், அயவீரச் செந்தூரம் இவை வகைக்கு ஒரு குன்றி எடை, முப்புச்சுண்ணம் அரை குன்றி எடை, இவற்றைக் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு இரண்டு குன்றி எடை காலை, மாலை சிறிது பறங்கி சூரணம் கலவையும் தேனும் கூட்டிக் கொடுத்துவரக் குணமாகும். (குட்டம் என்பது பெருநோயைக் குறிக்கும்).

2. அக்கரம் (வாய்ப் புண்) நிவாரணி அல்லது வாய் புற்று நோய் நிவாரணி :— சுத்தி செய்த படிகாரம், வெண்காரம் சமஎடை எடுத்துப் பொடித்து பசு வெண்ணெய் சேர்த்து நன்றாய் அரைத்து ஒரு குடுவையில் பாதியளவு பிடிக்கக் கூடியதாக அடைத்து சில்லு மூடிச் சீலைமண் செய்து புடமிட்டு எடுத்துப் பொடித்து வைத்துக் கொண்டு இதில் ஒரு பங்கு "படிக வெண்கார பற்பம்" எடுத்து, அதன் எடைக்கு குங்கில்யச் சூரணம் (பற்பம்) சவர்க்காரச் சுண்ணம் நெல்லிக்காய் சத்துப்பொடி (Nelli kai Juice powder) இவற்றைச் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2 முதல் 4 குன்றி எடை சிறிது பசு வெண்ணெயில் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வரவும். அதே சமயம் கீழ்கண்ட குடிநீரையும் வாய் கொப்பளித்து வர, வாய், தொண்டை இவற்றிலுண்டாம் புண், புற்று இவை குணமாகும்.

3. வாய் கொப்பளிக்கக் குடிநீர்ப் பொடி :— கருவேல மரப் பட்டைப்பொடி ஒருபங்கு (ஒரு பவுண்டு), களிப்பாக்கு, காசுக்கட்டி, மாசிக்காய், படிகாரம் இவை வகைக்கு அரைக்கால் பங்கு(2அவுன்சு) திரிபலைப் பொடி அரை பங்கு (8 அவுன்சு) இவற்றை ஒன்றாய்கலந்து வைத்துக்கொண்டு இதில் 4 அவுன்சு கலவைப் பொடியை ஒரு சட்டியிலிட்டு 4 (பக்கா) படி நீர்விட்டு காய்ச்சி நாலிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி அடிக்கடி வாய் கொப்பளித்துவர வாய்புண், வாய்ப்புற்று, தொண்டைப்புற்று, இரசவீறு இவைகளை குணமாக்கும்.

புற்றுநோய் தீர சதசஞ்சீவினி பற்பம்

மலைப் பிரதேசங்களிலிருந்து வேண்டிய மட்டும் சதசஞ்சீவினி என்னும் மூலிகை சமூலமாகக் கொண்டுவந்து நிழலுலர்த்தி எரித்து சாம்பலெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாய்

அரைத்து வில்லை தட்டி அகலிலடக்கி மூடியிட்டு சீலைமண் செய்து உலர்த்தி கனபுடம் போட்டெடுக்கச் சிறிது கருமை கலந்த பற்பமாக இருக்கும். இதனை மீண்டும் குமரிச்சாறு விட்டரைத்து வில்லை தட்டி முன்புபோல் புடம்போட்டெடுக்க, நல்ல வெள்ளை நிறம் அல்லது சந்தனம் போன்ற நிறமாகவுமிருக்கக்கூடும். இதனை 1 முதல் 2 சிட்டிகையளவு காலை, மாலை பசு வெண்ணையில் குழைத்துக் கொடுக்க புற்றுநோய்கள் குணமாகும். இதனை தனியாகவும், மற்ற புற்றுநோய் நிவாரணி மருந்துகளுடன் சேர்த்தும் கொடுத்துவர புற்று நோய்உள்ளும், புறமும் இருந்தாலும் குணமாகும். (அனுபவமுறை)

குறிப்பு:- இதேபோல் கெருடப்பச்சை என்ற மூலிகையையும் பற்பம் செய்து உபயோகிக்க புற்றுநோய் குணமாகும். பெரும்பாலும் இவ்விரு மூலிகைகளும் ஒரேமாதிரியாகத் தோற்றமளிக்கிறது.

எலுமிச்சம் பழத்தோல் பற்பம்

வாய், தொண்டை, வயிறு, குடல் இவற்றிலுண்டாம் புற்று நோய்க்கு ஏற்ற மருந்து.

நன்ருய்ப்பழுத்த எலுமிச்சம்பழங்களின் தோல்களை சேகரித்து வெய்யிலிலுலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி, கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்ருக அரைத்து வில்லை தட்டி அகலிலடக்கி மூடிச் சீலைமண் செய்து கனபுடம் போட்டெடுக்கவும். நிறமும் பற்பத்தின் மிருதுவும் சரியாக இருந்தால் உபயோகிக்கலாம். இல்லையானுல் இரும்புச் சட்டியிலிட்டு 6-மணி நேரம் காடாக்கினியில் வறுத்தெடுக்க நல்ல வெண்மையான பற்பமாகும். இதில் 2 முதல் 3 சிட்டிகை அளவு காலை, மாலை பசு வெண்ணெயில் அல்லது தேனில் அல்லது வேறு தக்க அனுபானங்களில் கொடுத்துவர, மேற்கூறிய புற்று நோய்கள் குணமாகும். தனியாகவும் கொடுக்கலாம், மற்ற புற்று நோய் நிவாரணி மருந்துகளுடன் கலந்தும் கொடுக்கலாம். அன்றியும் பசியின்மை, அருசி, வாந்தி, குமட்டல், தாகம், விக்கல், நாவறட்சி, ஒக்காளம், ஏப்பம், வயிற்று வலி முதலியவையும் குணமாகும். (அனுபவ முறை)

(தொடரும்)

ஏஜண்டுகள் கவனத்திற்கு!

பல ஏஜண்டுகள் முன்னிதழ் பாக்கிப் பணத்தை உடனடியாக அனுப்பி வைக்க கோரப்படுகிருர்கள். பழைய பாக்கியை அனுப்பவில்லையானுல், புதிய இதழ்கள் கண்டிப்பாக அனுப்பப் பட மாட்டாது.

உன்னைத்தான் குமுதமே!

— [க. வெங்கடேசன், B. SC., (M. A..)]
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

வேடிக்கையாக ஒரு பழமொழி சொல்வார்கள். பலநாள் பேசாமல் ஊமையாயிருந்த குழந்தையொன்று ஒருநாள் வாய்திறந்து பேசியதாம்! "வாய் திறந்து பேசியதே" என்ற மகிழ்ச்சி பரவுவதற்குள் அந்த குழந்தை பெற்ற தாயைப் பார்த்து, "நீ எப்போது தாலி அறுப்பாய்" என்று கேட்டதாம்.

அது போல,

'குமுதம்' பத்திரிகை கடந்த மாதம் ஒரு செயலைச் செய்தது. நடிகைகளின் "Thirst of knowledge" பற்றியும், அவர்கள் பெற்ற குழந்தை பிறந்தநாள் கேக் வெட்டியதையும் பற்றி வெளியிட்டே தமிழக மக்களின் தரத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கும் குமுதத்திற்கு திடீரென்று ஞானோதயம் வந்து விட்டது போலும்.

'அபூர்வ சந்திப்பு' என்ற பெயரில் அனுபவம் பெற்ற திரு. பலராமையாவின் சித்த மருத்துவ முறைகளையும், திரு. டி. கே. சண்முகம் அவர்கள் தம் குடும்பத்தில் மேற்கொண்ட ஒரு சித்த மருத்துவ சிகிட்சையைப் பற்றியும் கருத்து பரிமாறிக்கொண்ட செய்தியை வெளியிட்டது. இலட்சக் கணக்கான வாசகர்களிடையே 'பலராமையா — டி. கே. எஸ். உரையாடல், சித்த மருத்துவம் பற்றி தெளிவான- கருத்தினை பதியவைத்தது. — நாமும் மகிழ்ந்தோம். ஆனால் அது நீடிக்கவில்லை.

மறு வாரம் M. B. B. S. டாக்டர் ஒருவர் இதனைப் படித்துவிட்டு கொதித்து ஒரு கருத்துரை எழுதினர் என்று 'குமுதம்' வெளியிட்டது. அந்த டாக்டர் கூறியது இதுதான் :—

"சித்த மருத்துவர்கள் சரியாக மருந்தைக் கொடுக்காமல் நோய் முற்றி பயங்கரமான தோல் வியாதியாக மாறி எங்களிடம் வந்து விடுகிறது"

என்று எழுதியிருந்தார்.

இதனைப் படித்து விட்டு அன்றே நான் ஒரு மறுப்புரை எழுதினேன். குமுதம் அதனைப் பிரசுரிக்கவில்லை. நடு நிலைமையான நேர்மையான எண்ணம் கொண்டிருந்தால் குமுதம் அதனைப் பிரசுரித்திருக்க வேண்டும். நல்லது எது; கெட்டது எது? என்று கூட பகுத்துப் பார்த்துணர முடியாமல், பிரசுரிக்கத் தகாதவைகளை வெளியிடும் 'குமுதம்' போன்ற பத்திரிகையிடம் நல்லதைப் பிரசுரிக்கச் சொன்னது தவறு தான் என்று இப்போது தெரிகிறது.

ஆனால் குமுதத்திற்கு ஒரு எச்சரிக்கை தராமல் இருக்க முடியவில்லை!

உன்னுடைய விளையாட்டை, முட்டாள்தனமான குறும்புகளை நடிகைகளிட்டமும், அரசியல்வாதிகளிடமும் வைத்துக்கொள். ஆனால் பழம்பெரும் கலையான சித்த மருத்துவத்திடம் மட்டும் வைத்துக் கொள்ளாதே! மக்களிடையே அந்த மருத்துவம் மறுமலர்ச்சி அடைந்து வரும் இந்த நேரத்தில், டாக்டர். கோதண்டபாணி போன்ற அரைகுடங்களின் அபத்தமான கருத்துக்களை இனிமேல் பிரசுரித்து, சித்த மருத்துவத்தை இழிவுபடுத்த வேண்டாம்!

தமிழால், தமிழரால் வளர்ந்த உனக்கு தமிழ்க் கலைகளை போற்றத் தெரிந்தால் போற்று. இல்லையென்றால் வாயை மூடிக்கொண்டு சும்மா இரு!

இன்னொன்றும் கேள்!

டாக்டர். கோதண்டபாணிக்கு 'மறுப்புரை' கூறி எழுதிய கடிதத்தினை பிரசுரிக்க உனக்குத் துணிவில்லை என்றால் அதனை அந்த 'கோ' தண்டத்திற்கு அனுப்பி வை. அந்த ஜென்மம் அதனைப் படித்து உண்மை நிலையை உணரட்டும்! போதாது என்றால், இதோ! இன்னொரு அன்பர், டாக்டர். கோதண்டபாணி தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் ஆங்கில மருத்துவத்தின் அலங்கோலத்தினை அனுபவ பூர்வமாகக் கூறியுள்ளார். அதனை நீயும் படித்து; அவரையும் படிக்கச் சொல்.

இறுதியாக ஒன்று —

சில நிறைவுகளால் பல குறைகள்
மூடி மறைக்கப் படுகின்றது ஆங்கில மருத்துவத்தில்!

சில குறைகளால் பல நிறைவுகள்
இருட்டடிக்கப் படுகின்றன சித்த மருத்துவத்தில்!!
(குமுதம் போன்ற பத்திரிக்கைகளால்)

இந்த உண்மையை இனியாவது உணர்ந்து திருந்து.

முன்னர் கூறியது போல் ஊமைக் குழந்தை வாய் திறந்து பெற்றவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது போல்; தமிழ்க் கலைகளைப் பழித்து எம் போன்ற தமிழக மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே!

ஆங்கில மருத்துவத்தின் அலங்கோலம்!

— புலவர் தே. ப. சின்னசாமி
முத்துக்காபட்டி. P. O.

எதற்கெடுத்தாலும் டாக்டரிடம் ஓடுகின்றார்கள். அப்படியொரு பழக்கம் மக்களிடம் வந்துவிட்டது. சாதாரண தலைவலி காய்ச்சல் என்றாலும் நாற்பது, ஐம்பது ரூபாய்களை மாத்திரை மருந்துகளாக விழுங்கிவிடுவதைக் காண்கின்றோம். ஒன்றுமில்லாத நோய்களைக் கூட பெரிது படுத்தி ஆரவாரம் செய்து குருதி, சிறுநீர், மலம் பரிசோதனை செய்து; எக்ஸ்ரே எடுத்து நூறு, இருநூறு செலவு வைக்கின்றனர். திடீர் ஆபத்து என்று போனால் போதும்! ஆயிரம், இரண்டாயிரங்களை விழுங்கி கடைசியில் ஆளையும் முடித்து அனுப்புகின்றனர். உள்ளே நுழைந்து வெளியே வந்தால் கூட ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை! இப்படிப் பட்ட அலங்கோலங்களையுடைய **ஆங்கில மருத்துவத்தில் தான் மக்களுக்கு எத்தனை மோகம்?**

அலங்கோலமான சில நிகழ்ச்சிகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் :—

○ எனது நண்பருடைய குழந்தைக்கு நான்கு மாதம். காலையில் இருந்து வயிற்ருேட்டம். வசம்பு, மஞ்சளைச் சுட்டு அரைத்து ஒரு சங்கு ஊற்றியிருந்தால் குணமாகியிருக்கும். ஆனுல் அப்படி செய்ய வில்லை. ஒரு பிரபலமான லேடி டாக்டரிடம் கொண்டு போனுர்கள். சீட்டு எழுதிக் கொடுக்கப் பட்டது. 17 ரூபாய்க்கு ஊசி மருந்து வாங்கி வரும்படி கூறப்பட்டது. நான்கே மாதக் குழந்தைக்கு "டெராமைசின்" முதலான சக்தி வாய்ந்த நான்கு வெவ்வேறு ஊசி மருந்துகளை நான்கு ஊசியாகப் போட்டார் அந்த லேடி டாக்டர். பாவம் அந்தக் குழந்தை மருந்துகளின் வேகம் தாங்கமாட்டாமல் கை கால் இழுத்துக் கொண்டன. கண் பார்வை மேலிட்டுக் கொண்டது. குழந்தையின் பெற்ருேர் பயந்து நடுங்கி, "என்னம்மா! இப்படி?" என்றனர். அந்த அரக்கியோ, "நான் டாக்டரா? நீங்கள் டாக்டரா? எனக்குத் தெரிந்ததைச் செய்து விட்டேன் அவ்வளவு தான்! எடுத்துப் போங்கள்" என்று சொல்லிவிட்டாள். அந்தக் குழந்தையின் உடல் உறுப்புக்கள் யாவும் செயலிழந்து விட்டன. மற்ருெரு பெரிய டாக்டரிடம் கொண்டு போனுர்கள். "ஒன்றும் அறியாத பைத்தியக்காரர்கள் கூட இந்த மருந்துகளைக் குழந்தைக்குப் போட மாட்டார்கள்" என்ருர் அவர். அவரும் அவரால் முடிந்த அளவு பார்த்து; சேலம் பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார். அங்கே சொல்ல வேண்டுவதில்லை! மிகவும் பெயர் போன இடமாச்சே! பல சித்திரவதைக்குப் பின் குழந்தை இறந்தது.

○ பத்தாண்டு காலமாக குழந்தை இல்லாத ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. மருத்துவ மனையில் தான்! குழந்தை செல்லமாக வளர்க்கப் பட்டது. சாதாரண சளி, காய்ச்சல் என்ருல் கூட உடனே டாக்டரிடம் ஓடுவார்கள். அவர் ஊசி போடுவார்; குணம் ஆகும். பத்தாம் நாள் மீண்டும் டாக்டருக்குப் பணம் சேரும். குழந்தைக்கு நலம் குறையும். இப்படியாக ஒரு வருடம் சென்றது. காய்ச்சல் வந்தது — டாக்டரிடம் போனுர்கள்; பத்து நாள் ஊசி போட்டார், மாத்திரை கொடுத்தார்; குணமாகவில்லை! குழந்தையின் உடல் இளைத்தது. காய்ச்சல் வளர்ந்தது. சேலம் பெரிய மருத்துவ மனைக்கு சிபார்சு செய்யப்பட்டது. அங்கேயும் வேண்டிய தர்பார் நடைபெற்றது. ஐந்து நாட்களுக்குப் பிறகு குழந்தைக்குச் சங்கடம் பெருகியது. டாக்டர் வந்தார்! உடனே இரத்தம் கொடுக்க வேண்டும் என்ருர். அதற்காகப் பெரிய டாக்டரைப் பார்க்கச் சென்ருர்கள். பல சிபார்சுகளுக்குப் பிறகு இரத்தம் கொடுக்க உடன்பட்டார். ஆனுல் அங்கு இரத்தம் சேமிப்புக் கிடங்கில் இரத்தம் இல்லை! குழந்தை இறந்தது. ஆயிரக்கணக்கான ரூபாய்களை

மருந்துக் கடைகளுக்கும், டாக்டர்களுக்கும் அழுது விட்டு அந்த குழந்தை அழுவாமல் சென்றது.

○ சர்க்கரை ஆலையில் பணியாற்றும் ஒரு நண்பர் தனது மனைவியை ஆருவது மாதத்தில் பிரபல லேடி டாக்டரிடம் அழைத்துச் சென்றார். “இது முதல் பிரசவம்; ரொம்ப கஷ்டமாகும். குழந்தை சரியாக வளர்ச்சி பெறவில்லை. இங்கேயே தங்கட்டும்; நான் கவனித்துக் கொள்கிறேன்” என்றாள் டாக்டர். அவ்வாறே டாக்டரது மருத்துவ மனையில் விட்டுவிட்டு, நாளும் வீட்டுக்கும், மருத்துவ மனைக்கும் அலையாய் அலைந்தார் அந்த நண்பர். 9-வது மாதம் 4,50 (நானூற்று ஐம்பது) ரூபாய்கள் கடன் வந்தது. தனது 300 ரூபாய் சம்பளம் பத்தாமல், இந்த நிலையில் ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு வந்தார், மனைவியை பார்க்க. டாக்டர் அம்மா வந்தார்கள். “இந்தாப்பா! உனது மனைவிக்குக் குழந்தை இடம் மாறி குறுக்கே விழுந்து விட்டது, தாய்க்கு ஆபத்து! உடனே சேலம் பெரிய டாக்டரிடம் கொண்டுபோக வேண்டும். ரூ. 2000 எடுத்துக் கொண்டு புறப்படு” என்றார். உடனே 2000 ரூபாய்க்கு எங்கே போவது? இந்த நேரங்கெட்ட நேரத்தில் என்ன செய்வது? என்று தயங்கினார். “உன் மனைவி பிழைக்க வேண்டுமென்றால் உடனே 2,000 ரூபாய் வேண்டும். நீ என்ன செய்வாயோ” என்றார்; கருணை மிக்க டாக்டர். அந்த நேரத்தில் அந்த நண்பர் தனது நெருங்கிய நண்பர்களைக் கண்டு அழுதார். நல்ல நண்பர்கள் உதவினார்கள். சேலம் அழைத்துச் சென்றார் லேடி டாக்டர். அங்கே அந்த மருத்துவரிடம் ஒப்படைத்துவிட்டு தனது பங்கைப் பெற்றுத் திரும்பிவிட்டார். பிறகு பதினைந்து நாட்களுக்குப் பின்பு குழந்தை பிறந்தது. சில ஆயிரங்களைக் கடன் வாங்கிக்கொண்டு.

○ ஆசிரியர் நண்பர் தங்கைக்குக் குருதியில் சர்க்கரை நோயாம். பெரிய டாக்டர்களின் துணையோடு ஆறு ஆண்டுகளாக நாளும் தவறாமல் ‘இன்சுலின்’ போட்டுக்கொண்டே இருக்கின்றனர். 16 வயதான அந்த இளம்பெண் ‘இன்சுலி’னாலேயே வளர்ந்து வருகின்றது பாவம்! உடலே மருந்தாகிவிட்டது. தற்போது பல புதிய நோய்கள் தோன்றியுள்ளன. ஒரு குடும்பத்தின் வருமானமே ஒரு பெண்ணின் மருத்துவத்திற்கு அழிந்து கொண்டிருக்கின்றது. இருந்தும் டாக்டர்கள் மேலும் பல சோதனைகள் செய்ய வேண்டும். இங்கே அழைத்துச் செல்லுங்கள், அங்கே அழைத்துச் செல்லுங்கள் என்று ஆற்றுப்படுத்துகின்றனர். என்னே ஆங்கில மருத்துவத்தின் தனிச்சிறப்பு!?

* * *

ஐந்தறைப் பெட்டித் துணுக்குகள்!

★

● சுக்கு (தோல் நீக்கியது), மிளகு, திப்பிலி, ஓமம், வெங்காரம் (பொரித்தது) லவுங்கம், சமஅளவு எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் நன்ருக அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. அடிக்கடி வரும் காய்ச்சலுக்கு இந்த மாத்திரை ஒன்றினை துளசிச் சாற்றில் உரைத்து உள்ளுக்கு தினம் இருவேளை கொடுத்து இச்சாபத்தியம் இருக்க வேண்டும்.

○ சன்னி சுரங்கட்கும் இதே மாத்திரையைத் தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்கவும்.

○ சலதோடத்திற்கு வெற்றிலைச் சாற்றில் கொடுக்கவும்.

○ இம் மாதிரி மூன்று நாட்கள் கொடுத்தாலே போதும்!

○ செலவின்றி - பின்விளைவுகள் இன்றி நோய் தணியும்.

● சுக்கு கொஞ்சம் வாங்கி அதன் மேல் புரணியை நீக்கி இடித்துப் பொடித்து சலித்துக் கொண்டு; அதன் எடைக்கு சம அளவு சர்க்கரை கலந்து காலையில் அரை தேக்கரண்டி அளவு வாயிலிட்டு காய்ச்சிய பால் குடிக்கவும். மாலையிலும் அம்மாதிரி செய்யவும். இப்படி 7-நாள் செய்தால் அசீரணம், வாய்வுக் கோளாறுகள் நீங்கி, பசி நன்ருக எடுக்கும்; சுறுசுறுப்பும் உண்டாகும்.

○ எளிய முறை! என்றைக்கும் ஆபத்து தராத முறை!!

○ எல்லோரும் செய்யக் கூடிய முறை!!!

● சுக்கு, மிளகு, திப்பிலி இம் மூன்றையும் சம எடை எடுத்து இடித்து சூரணித்து காலையில் சாப்பிட மாந்தக்கழிச்சல் நீங்கும். சீதளம் உள்ளவர்கள் தேனில் சாப்பிட வேண்டும். பனைவெல்லம் கலந்து சாப்பிட்டால் வயிற்றுநோய் நீங்கும்.

● லவுங்கம் 2, கற்பூரம் சிறிது, ஓமம் சிறிது இம் மூன்றையும் ஒன்ருக இடித்து அதை பல்ஈறு வீக்கமுள்ள இடத்தில் அழுத்தி வைத்தால் நச்சுநீர்கள் உமிழ்நீருடன் கலந்து வெளியாகும். அதனை துப்பிவிட்டு பிறகு வெந்நீரால் வாய் கொப்பளிக்கவும். பல்ஈறு வீக்கம் கரைவதுடன் வலியும் குறையும்!

உ

தலை முதல் கால் வரை!

— முன் மாதத் தொடர்ச்சி

மனதால் ரசிக்கக் கூடியவர்கட்கு உடல் உழைப்பு அதிகம் இருக்காது என்று முன் மாத இதழில் குறிப்பிட்டேன். ஏன்? மனம் நினைத்தால் நிமிட நேரத்தில் எத்தனையோ விஷயங்களில் முடிவு காணலாம். அவ்வளவு வேகமும், சக்தியும் அதற்குண்டு. மனம் நினைத்தால் ஒரு நொடியில் எந்த மண்டலத்துக்கும் போய் வரக் கூடும்!

ஆனால் உடல் உழைப்பால் நாம் பலநாட்கள் பலபேர் செய்து முடித்து, ஓர் ராக்கெட் பூமியிலிருந்து கிளம்பி மிக அருகாமையில் இருக்கும் சந்திரமண்டலத்தைப் போய் பார்த்து திரும்பி வருவதற்கே போக வர இரண்டு வாரம் (அதாவது 15-நாள்) ஆகிறதென்றால் பல கோடி ஒளி வருடங்கள் தொலைவில் உள்ள மிகப் பெரிய மண்டலங்களுக்குச் சென்று திரும்ப ஒருவனின் ஆயூட்காலம் எல்லாம் முயன்றாலும் பூத உடம்பால் ஆகாது என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

எனவே மனம் வேறு; உடல் வேறு, இவை இரண்டும் ஒன்று பட்டால் தான் மனித வாழ்க்கை முழுமை பெறும் என்பதைக் கூற மேல்கண்ட இவ்வளவு பெரிய விளக்கம். ஆமாம்! இப்பொழுது பழைய இடத்துக்கு வருகிறேன்.

தத்துவார்த்தம்

திறந்த வாயுடன் காட்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்கிறார்களே! அவர்கள் எல்லோரும் தத்துவ ஞானிகள்! ஆமாம்! உண்மை. பிரச்சனைகளில் ஈடுபடும் போது தன் உடலையே இவர்கள் மறந்து விடுகிறார்கள். இப்படி இவர்கள் வாயைத் திறந்துகொண்டு ரசிப்பதால் சுகாதாரக் கெடுதல்கள் உண்டாகும் என்று சிறிதளவு

கூட மனதில் கவலைப் படுவதில்லை. அதை விட ரசனையான காட்சிகளிலும், செவி வழியாக கேட்கும் இசை ஒலிகள் படும்போதும் இவர்கள் தன்னையே மறந்து விடுகிறுர்கள். இவர்கள் தன்னையே மறந்து விடுகிறுர்கள். இவர்கள் எப்படி என்ருல் "*தனக்கென வாழா பிறர்க்குரியாளர்*" என்ற வரிசையில் இடம் பெற்றவராக இருப்பினும், இவர்கள் உடல் சுகாதாரம் என்ற தூய்மையிலிருந்து மாறுபட்டு போகிறபடியால் (திறந்த வாயர்களைக் குறிப்பிடுகிறேன்) இந்த தத்துவ வாதிகளின் உடலை கிருமிகள் புகுந்து நாசப்படுத்தி குறட்டை, டான்சில்; மூல நோய்கள், நுரையீரல் நோய்கள் இப்படியாக பல நோய்கள் இந்த தத்துவவாதிகளைப் பிடித்து, அலட்டி, மிரட்டி, அற்பாயுளில் கொண்டு போய் விடுகிறது.

இதனைத் தான் ஆங்கில மருத்துவர்கள் கண்கண்ட காட்சியாய் விளங்கும் இரண்டாவது நிலையை பொறியியல் கொண்டு கண்டுபிடித்து "ஓ! உனக்கு டான்சில், ஓ! உனக்கு அடினுயிட்ஸ், ஓகோ! உனக்கு டிப்தீரியா, நீ பிழைக்கமாட்டாய் என்று கண்டுபிடித்துக் கூறி விடுவார்கள்."

இத்தகைய நோய்கள் எல்லாம் வராமல் தடுத்துக் கொள்ள விரும்பும் (மனதால் ரசிக்கும் திறந்த வாயர்கள் எல்லோரும்) கடந்த மாசி மாதம் நமது இதழில் 28-ம் பக்கம் வரை உள்ள கட்டுரையை வாசித்து அதற்கேற்றபடி தடுப்பு செய்து கொள்ளுவது இன்றியமையாத ஒன்ருகும். குறிப்பாக இளம் வயதிலேயே இதனைப் பழக்கத்திற்கு கொண்டு வந்து வாயை மூடி வைக்கும் பழக்கம் இருப்பின் முகமும் நல்ல பொலிவுடன் அழகாகத் திகழும்.

வாய் - பல் - நாக்கு

இனி வாயின் உள்ளே இருக்கும் உறுப்புக்களை கவனிப்போம். வாயைத் திறந்தவுடன் நமக்கு கீழே 16 பற்களும், மேலே 16 பற்களும், நடுவில் நாக்கு அமைந்து இருக்கும். இதற்கும் உள்ளே நோக்கிப் பார்த்தால் ஒரு சிறிய உறுப்பு கீழ்நோக்கி தொங்கிக் கொண்டிருக்கும். இதற்கு உள் நாக்கு என்று கூறுவர்.

இப்படி வாயிற்குள்ளே மேலும் கீழும் வரிசையாக பற்களை அமைத்து; அதன் உள்ளே நாக்கை வைத்து; அந்த நாக்குக்குப் பற்களை இரும்புக் கதவுகள் போல் பாதுகாக்க வைத்துவிட்டான் இறைவன்.

நா காக்க; பல் காக்க

எதைப் பற்றி சிந்தனை இல்லாவிட்டாலும் மனிதனுக்கு நாக்கு பற்றியும், பற்களைப் பற்றியும் சதா சிந்தனை இருக்கவேண்டும். அதனால் தான் "யாகாவாராயினும் நாகாக்க" என்றார் வள்ளுவர். இந்தக் குறளைக் கூறியவர் இன்னொன்றும் கூறுகிறார். "மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்கிறார். நாவின் பேச்சை மட்டும் அடக்கி விட்டால் போதாது. நாக்கு ருசிக்கு நாம் அடிமையாகி விடக்கூடாது. நன்றாக இருக்கிறது என்று அளவுக்கு மிஞ்சி சாப்பிடுவது ஆபத்து.

ஆகாரமாக நம் உடம்புக்கு சேரும் பொருள்களை எல்லாம் இந்த பற்கள் தான் அரைக்கிறது. அப்படிச் செய்யும் போது இந்த நாவு பொருள்களை பற்களுக்கு இடை தள்ளி தள்ளி கொடுக்கிறது.

(தொடரும்)

தயாராகி விட்டது
மகா மூலிகை எண்ணெ!

- காலில் ஆணி,
- தோலைப் பற்றிய நோய்கள்,
- வெண் குட்டம்,
- உடலில் அசுத்த நீர்த் தேக்கம்,
- ஊளைச் சதை,

போன்ற கொடிய நோய்களை வேருடன்களைய மேற்கண்ட "மகா மூலிகை எண்ணெ" யை பத்தியமுடன் சாப்பிட ஆச்சர்யமடையும் வகையில் குணமாகும். மேகநோய்கள் உடையவர்களுக்கு இந்த எண்ணெ சிறந்த நிவாரணி யாகும். ஷி எண்ணெயை பெற விரும்புவோர் 25-காசு தபால் தலையுடன் எழுதவும்.

அரிய முறையில் வெளியாகி

விரைவாக விற்பனையாகிறது!

ஆசிரியரின்

அரும்பெரும் உழைப்புப் புதையலான

"நம் நாட்டு மூலிகைகள்"

[ஆறுவது பாகம்]

இருபத்து மூன்று மூலிகைகளின் உருவ அமைப்புகளை
பட விளக்கங்களுடன் தாங்கி,
அவைகளின் குண விசேஷங்களையும்
மருத்துவப் பயனையும்
எளிய முறையில் தெள்ளத் தெளிவாக தூய
வெள்ளை நிற காகிதத்தில் 140 பக்கங்கள் அச்சாகி

பேரூர் மடாதிபதி
தவத்திரு. **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**
அவர்களின் திருக்கரத்தால் வெளியாகிய
சிறப்பினைப் பெற்றுள்ளது.

விலை ரூ. 3-00 தபால் செலவுடன் ரூ. 3-25

வாசக அன்பர்களும், சந்தா அன்பர்களும், மற்றும்
மூலிகை மருத்துவத்தில் பற்றுள்ளவர்களும்
வாங்கிப் படித்து பயனடையுங்கள்!

★

M. C. அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆ. இரா. கண்ணப்பர்,
59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

எமது வெளியீடுகள் :

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம் ரூ.	3	
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	3	(
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	3	(
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	3	(
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	3	0(
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	3	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	2	00
விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்		3	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60

ஒரு புத்தகத்திற்கு தபால் சிலவு 25-காசு சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற

புத்தக விலையுடன்

ரூ. 2-75 சேர்த்து கீழ்கண்ட முகவரிக்கு

மணியார்டர் அனுப்பி பெறலாம்.

முகவரி : ஆ. இரா. கண்ணப்பர்,

மூலிகை மணி அலுவலகம்,

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press, Vellore N. A.
Printer, Editor & Publisher Dr A. R. Kannappar, R. M. P.
59, Masilamani Muduli Street, Vellore, N. A.